Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

இலவச கணினிப் பயிற்சிநெறி - 2003

2002 O/L CHILDREN'S PROGRAM

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி

ஆரம்பம்:- 28-12-2002 } 3.00 மணிக்கு
05-03-2003

காலம்: 3 மாதம்

JAFFNA TECHNICAL INSTITUTE

No.07, Palaly Road, Jaffna.

(இலுப்பையடிச் சந்திக்கருகில்) (சி-254)

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 26 (31.12.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 91

## உயர் பாதுகாப்பு வலய மீள்குடியேற்ற விவகாரம்

# அமைச்சர் மிலிந்த தலைமையில் உயர் மட்டக்குழு இன்று யாழ். வரும்!

### விண்ணாணம் விநாசியர்



எவையள் வந்து போனாலும் சனத்தை தங்கட இடத்துக்கு விட்டாத்தானே பிரச்சினை தீரும்

## இடம்பெயர்ந்தோர் விபரங்கள் அரச அதிபர் சமர்ப்பிப்பார்

(கொழும்பு)

**யாழ். உயர் பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிட அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையிலான பாதுகாப்பு அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

அமைச்சர் மிலிந்த தலைமையிலான இக்குழுவில், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ, இராணுவத்தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல, வட பகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் அடங்குகின்றனர்.

பலாலியில், இவர்கள் யாழ். படைகளின் உயரதிகாரிகள் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்றிலும் கலந்து கொண்டு, அண்மையில் பாதுகாப்பு உயர் வலய மீள்குடியேற்ற விவகாரத்தால் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடுவர் எனத் தெரிகிறது.

இதேவேளை - உயர்பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறப்படும் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் விபரங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு, யாழ். அரசாங்க அதிபர் பத்மநாதனுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. நாளைய சந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இருநூறு பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதம் அனுப்பிவைப்பு

வட - கிழக்குப் பகுதிகளுக்கென மேலும் ஒரு தொகுதிப் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

சுமார் இருநூறு பேருக்கு இவ்வாறு ஆசிரிய நியமனம் கிடைக்கவிருக்கிறது. தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளுக்குரிய நியமனக்கடிதங்கள் இன்று திருமலையில் இருந்து தபால் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

மேற்படி நியமனம் வழங்குவது தொடர்பான விசேட கூட்டம் ஒன்று நேற்று மாகாணக்கல்வி அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

# மக்கள் மீள்குடியமர்வுக்கு மாற்றுவழி அரசு பரிசீலிப்பு!

## மிலிந்த மொறகொட கூறுகிறார்

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைக்கு மாற்றுவழி காண்பது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றது என, அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்றம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை குறித்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். பேச்சுவார்த்தைகளின்போது சில வேளைகளில் முரண்பாடுகள் எழலாம். அது இயல்பானது என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், அதற்காகப் பேச்சுவார்த்தை முறிவடையப்போகின்றது என யாரும் கருதக்கூடாது என்றும் விளக்கிக் கூறினார்.



இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும். அதனால் யாரும் குழப்பமடையத் தேவையில்லை என்றும் தெரிவித்தார். பேச்சுவார்த்தைகளில் அவ்வப்போது முரண்பாடுகள் அல்லது விட்டுக்கொடுப்பின்மை ஏற்படுவதை (12ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வலய விவகாரம் பேச்சுகள் மூலம் தீர்க்கலாம்!

## வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக அரசாங்கத்தரப்பிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே முரண்பாடுகள் தோன்றினாலும் அவை பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்பட்டுவிடும் என, தான் எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றும் விடயத்தில் ஏற்பட்டுள்ள இறுக்கமான சூழ்நிலை பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது இத்தகைய தீவிரமான, கடுமையான பிரச்சினைகள்- அமைதிவழியில் கலந்துரையாடப்படலாம் என்ற நிலை நிலவுவதையிட்டுத் தாம் மகிழ்ச்சியடைவதாகவும்,

இனப்பிரச்சினைக்கு வன்முறைகளைத்தவிர்த்து அமைதியான அரசியற் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண இரண்டு தரப்புமே அர்ப்பணிப்புடன் இருப்பதை உலகம் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உரும்பிராய் மர்ம மரணம்

## சிறுமியின் ஆடைகளும் சோதனைக்காக அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் மர்மமான முறையில் மரணமடைந்த சிறுமியின் உள்ளாடைகளும் மற்றும் இந்த மரணம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கும் சந்தேக நபரான இளைஞனின் இரத்த மாதிரியும்- பிரேத பரிசோதனை அறிக்கையுடன் மரபணுப் பரிசோதனைக்காக இன்று ராகம மருத்துவபீடத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

உரும்பிராயில் கடந்த வெள்ளிக்கிழமை மர்மமான முறையில் மரணமடைந்த செ.துவாரகா (வயது 10) என்ற சிறுமியின் மரணம் தொடர்பாக சட்டவைத்திய அதிகாரி சிறிஇராஜேஸ்வரன், யாழ். வருகை தந்திருக்கும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையைச் சேர்ந்த பேராசிரியர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி பொன்னாலை மக்கள் போராட்டம்!

## சங்கானைப் பிரதேச செயலகம் செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

பொன்னாலைப் பிரதேசத்திலும் அதனை அண்டிய ஏனைய பிரதேசங்களிலும் மக்களை மீளக் குடியமர அனுமதிக்கும்படி கோரி, சங்கானை பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று மறியல் போராட்டம் நடைபெற்றது.

பொன்னாலைக் கிராமத்திலும் அதனையண்டிய ஏனைய கிராமங்களிலும் 1996 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்டு வருவதனால் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

இதனால், மேற்படி மக்கள் தங்

(12ஆம் பக்கம் பார்க்க)




சங்கானை பிரதேச செயலகம் முன் நேற்று நடந்த மறியற் போராட்டம்.

## உயர் பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம்

# ராணுவத்தின் மறுப்பை எதிர்த்து வலி.வடக்கில் உண்ணாவிரதம்!

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களின் மீள்குடியேற்றத்துக்கு இராணுவம் அனுமதி மறுத்து வருவதைக் கண்டித்து, தெல்லிப்பளையில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மூன்றாம் திகதி தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்தின் முன்றலில் நடைபெறவிருக்கும் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

உயர்பாதுகாப்பு வலயத்தில் பொது மக்களின் மீள்குடியமர்வுக்கு அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், இவ் உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே சுமார் ஐம்பதாயிரம் வீடுகள் வெறு

(12ஆம் பக்கம் பார்க்க)

# மீள்குடியமர்வு கொடுப்பனவு மேலும் தாமதமடையலாம்!

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்கில் மீளக்குடியமர்ந் திருக்கும் மக்களுக்கான, பதினைந் தாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கு வது தாமதமடையவுள்ளது.

இக்கொடுப்பனவு வழங்குவதற் கான ஆரம்ப நடவடிக்கைகளே ஜன வரி மாதத்தில் மேற்கொள்ளப்பட வுள்ளன. உலக வங்கியிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப் பட்ட நிதியிலிருந்தே இக்கொடுப் பனவு வழங்கப்படவுள்ளது. ஒவ் வொரு மாவட்டச்செயலகங்களும் "நிக்கொட்" அமைப்பும் இணைந்தே மேற்படி கொடுப்பனவை வழங்கும் நடவடிக்கையை செயற்படுத்தவுள் ளன.

இக்கொடுப்பனவுகளை வழங்கு வதற்கான நடவடிக்கைகள் குறித்து விளக்கும் சுற்றுநிருபங்கள் மட் டுமே தற்போது அனைத்து அரச செயலகங்களுக்கும் அனுப்பி வைக் கப்பட்டிருக்கிறது.

இதற்கான அடுதத கட்ட நட வடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு மக்களுக்கான கொடுப்பனவு வழங்குவதற்கு மேலும் காலதாம தம் ஏற்படும் என்று தெரியவருகி றது.

(க)

# இரு குழுக்களுக்கிடையில் மோதல் அரியாலையில் மூவர் படுகாயம்!

அரியாலை - கனகரட்ணம் வீதி யில் உள்ள மதுபான விற்பனை நிலையத்துக்கு அருகில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட வாய்த் தகராறு கைகலப்பில் முடிவடைந்தது. இதில் மூவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற மேற்படி மோதலில் கத்தி, அலவாங்கு, வாள் மற்றும் கற்கள் போன்ற ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன.

அத்துடன், மேற்படி கைகலப் பில் ஈடுபட்டிருந்த சிலரால் - அப்பகு திப் பெண் ஒருவரின் சைக்கிள் ஒன்று அருகில் உள்ள வீட்டு வளவு ஒன்றி னுள் தூக்கி வீசப்பட்டது. பின்னர் அப்பகுதிக் கிராம சேவகரால் அச் சைக்கிள் மீட்கப்பட்டு, பொலிஸ் நிலையமூடாக உரியவரிடம் ஒப் படைக்கப்பட்டது. இதுபற்றி பொ ஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ள னர்.

# மாகாணக் கல்வி நிறுவகம் அமைப்பதற்கு ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாண ஆசிரி யவாண்மையை மேம்படுத்துவதற் கும், சகல வசதிகளையும் இலகு விலே பெற்றுக்கொள்வதற்கும் ஏற்ற வகையில் மாகாணக்கல்வி நிறுவ கம் ஒன்றை நிறுவுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகி றது.

மாகாணக் கல்வி நிறுவகம் நிறுவுவது தொடர்பாக குழு அமைக் கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும்,

இது தொடர்பாக -

வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுடன் கலந்தாலோ சிக்கப்பட்டு சாதகமான முடிவு பெறப்படுமென்றும் தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரி வித்துள்ளார்.

(ச,கி)

# ஜே.வி.பியினருடனான கூட்டணி சுதந்திரக் கட்சியை அழித்துவிடும்

## கட்சியின் மூத்த பிரமுகர்கள் கருத்து

(கொழும்பு)

ஜே.வி.பியுடன் மாற்று அரசாங் கம் ஒன்றை அமைக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முயற்சி குறித்து சுதந்திரக் கட்சித் தலைவர் கள் பலர் அதிருப்தி கொண்டுள்ள னர்.

இது, சுதந்திரக் கட்சியின் அடை யாளத்தையே இழக்கச்செய்து விடும் என்றும், கட்சியின் சின்னத்தையே காணாமற்போகச் செய்து விடும் என் றும் இவர்கள் கருத்து வெளியிட்டுள் ளார்.

இப்படியான நிலை ஏற்பாட்டால் ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழு, சுதந் திரக் கட்சிக் குழுவைக் கட்டுப்படுத் தும் நிலை ஏற்படும் எனவும், இத னால் சுதந்திரக் கட்சி மெல்ல மெல்ல அழிந்து விடும் என்றும் மூத்த சுதந் திரக் கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரி வித்தார்.

# யாழ். பொது நூலகத் திறப்பு விழா ஜனவரியில் இடம்பெறமாட்டாது!

## வேலைகள் முடிவடையவில்லையாம்

(கொழும்பு)

ஜனவரியில் நடைபெறவிருந்த யாழ். நூலகத் திறப்பு விழா பிற்போ டப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜெய லத் ஜெயவர்த்தனா தெரிவித்துள் ளார்.

120 மில்லியன் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்ட நூலகத் துக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு, மேலும் 20 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது. இந்நிதி கிடைக்காமையினால் திறப்பு விழாவைப் பிற்போடவேண் டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தீயணைப்பு உபகரணங்கள், மின்சார வசதிகள் உட்பட சில வச திகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதனால், இவ்வசதிகள் ஏற்படுத்தப் பட்ட பின்னரே திறப்பு விழா இடம் பெறும் என அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா மேலும் தெரிவித் தார்.

# அங்காடி இட ஒதுக்கீட்டில் முஸ்லிம்களுக்குப் பாரபட்சம்!

## தீர்வுகாண சங்கம் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அங்காடி வியாபார நிலையங்களுக் கான இட ஒதுக்கீட்டின் போது முஸ் லிம் வியாபாரிகளுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக சைனா பஸார் என்ற மீள்குடியேறிய முஸ்லிம் அங் காடி வியாபாரிகள் சங்கம் தெரி வித்துள்ளது.

யாழ்.மாநகர சபையினரால், யாழ் நகர மரக்கறிச்சந்தையில் நடை பெற்று வந்த அங்காடி வியாபார நிலையங்களுக்கு முனீஸ்வரன் வீதிப் பகுதியில் புதிதாக இடங்கள் ஒதுக் கீடுகள் செய்யப்பட்டபோது முஸ் லிம் வியாபாரிகளுக்கு பாரபட்சம் காட்டப் பட்டுள்ளது எனவும்,

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய வகையிலும், முஸ்லிம் அங் காடி வியாபாரிகளின் பலமான குரலாக இருப்பதற்காகவும், முஸ் லிம் வியாபாரிகளின் உரிமைகளைப் பெறுவதற்காகவும் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் மொஹிதீன் ஜும் ஆ பள்ளிவாசலில் முஸ்லிம் வர்த்தகர்களுக்கான கூட்டம் ஒன்று நடைபெற்றது. இதன்போது சைனா- பஸார் என்ற மீள்குடியேறிய முஸ் லிம் அங்காடி வியாபாரிகள் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இச்சங்கத்தின் தலை வராக மஜீத் றொய்ஸ் தெரிவு செய் யப்பட்டார்.

இக்கூட்டத்தின் இறுதியில் இச் சங்கத்தின் தலைவர் ஒப்பமிட்டு செய்திக்குறிப்பு ஒன்று வெளியிடப் பட்டது. இச்செய்திக் குறிப்பில் மேற் படி விபரங்கள் தெரிவிக்கப்பட்டிருந் தன.

# ஓய்வுபெறும் வயதை 65 ஆக அதிகரிக்குமாறு வேண்டுகோள்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் சேவை யில் இருந்து ஓய்வு பெறுவதற்கான வயதை 65 ஆக அதிகரிக்குமாறு, முதியோர் தேசிய சபை - பொதுநிர் வாக அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

தற்போது நாட்டின் மொத்த சனத்தொகையில் 10 சதவீதமாக உள்ள முதியோரின் தொகை 2025 ஆம் ஆண்டில் 22 சதவீதமாக அதி கரிக்கும் எனத் தெரிவித்துள்ள முதி யோர் தேசிய சபை, இதனைக் கவ னத்தில் எடுத்து ஓய்வுபெறும் வய தை 65 ஆக அதிகரிக்குமாறு - பொது நிர்வாக அமைச்சின் செயலாள ருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொம்மைவெளியில் கழிவுப் பொருட்களால் துர்நாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட் பட்ட கடற்கரை வீதி, பொம்மை வெளிப் பகுதிகளில் நீண்டகாலமா கக் கழிவுப் பொருட்கள் அகற்றப்ப டாமையினால் துர்நாற்றம் வீசுவது டன் சுகாதாரத்திற்கும் பெரும் அச்சு றுத்தலாக உள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(100)

## புளுக்கொடியல் உற்பத்தியில் ஆர்வம்!

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி மக்கள் புளுக்கொடி யல் உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

குறிப்பாக - மண்கும்பான், அல் லைப்பிட்டி, வேலணை, நெடுந்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக் களே இதனை மேற்கொண்டு வரு கின்றனர்.

(53)

# சிறுவர் உரிமை மீறல் வழக்குகள்; சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

சிறுவர் உரிமைகள் பேணப்ப டாமை தொடர்பான வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்கு, தேசிய சிறு வர் பாதுகாப்பு அதிகார சபை நடவ டிக்கை எடுப்பதற்குத் தயாராகவுள் ளது.

இதற்கான நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து தாம் மேற்கொள்ளவுள் ளதாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உயர் அதிகாரி ஹரேந்திர டீ சில்வா தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ள நீதி மன்றங்களில் சிறுவர் உரிமைகள் தொடர்பான வழக்குகள் பல, நட வடிக்கைக்கு எடுக்கப்படாமல் தேங் கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

(க)

# ஒஸ்லோ பேச்சு பற்றிய விவாதம் 14 ஆம் திகதி நாடாளுமன்றில்!

நோர்வேயில் சமீபத்தில் நடை பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தை கள் தொடர்பான நாடாளுமன்ற விவாதம், ஜனவரி மாதம் 14 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு விவாதம் பற்றி எழுதிய கடிதத்தைத் தொடர்ந்தே இந்தத் திகதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி யும், ஜே.வி.பியும் விவாதத்துக்கு இரண்டு நாட்கள் ஒதுக்கப்படவேண் டும் என்ற கோரிக்கை விடுத்திருந் தது.

இதற்குப் பதிலாகவே 14 ஆம் திகதி இரவு 9 மணிவரை, ஒஸ்லோ வில் நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகள் சம்பந்தமான விவா தம் நடைபெறும் என்று எதிர்க்கட் சித்தலைவரின் அலுவலகம் அறி வித்துள்ளது.

## 930 தாதிகள் புதிதாக நியமனம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சு 930 புதிய தாதிமார்களை நியமனம் செய்துள் ளது. நேற்றுமுன்தினம் இவர்களுக் கான நியமனங்கள் வழங்கப்பட்டன. தாதிகள் பயிற்சியை நிறைவு செய்த ஒரு தொகுதியினருக்கே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## கைகலப்பில் ஒருவர் காயம்

நேற்றுப் பிற்பகல் 5 மணியள வில் அரியாலைப் பகுதியில் ஏற் பட்ட கைகலப்பில் ஒருவர் தலை யில் பலத்த காயமடைந்தார்.

மேற்படி சம்பவத்தில் அரியாலை யைச் சேர்ந்த ஜே.மிஷாந்தன் என்ப வரே தலையில் பலத்த படுகாயம டைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(46)


இரண்டாவது பிறந்த தின வாழ்த்து

HAPPY BIRTHDAY



ஸ்ரீகாந்தராசா சஞ்சீபன்

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த
சின்னத்தம்பி ஸ்ரீகாந்தராசா - றஜனி தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்

செல்வன் சஞ்சீபன்

தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று தமது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, சகோதரர்களான கஸ்தூரி, சிந்துஷா, கோகுலன் மற்றும் பெரியத்தை, சித்தி, பெரியப்பா குடும்பத்தினரும் சித்திர வேலாயுதர் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

புதுத்தோப்பு,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

ஸ்ரீகாந்தராசா - றஜனி
தம்பதிகள்.

(சி-376)

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று மட்டும்
எம்.ஜி.ஆர்., ராதா சலூஜா நடித்த
இதயக்கனி
10.30, 2.30 மட்டும்
AIRFORCE I
இரவு 7.00 மட்டும்
1.1.2003 சுந்தரா ரவல்ஸ்
(சி-262)

நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்
அஜித், மீனா நடித்த
வில்லன்
11.00, 2.45, 6.00 (பு.நே.) (சி/287)

# யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலத்தை இனி நீடிக்கவேண்டாம்

## தமிழ்க் காங்கிரஸ் தலைவர் விநாயகமூர்த்தி அரசுக்குக் கடிதம்

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை நீடிக்க வேண்டாம் என அரசாங்கத்திடம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்க்காங்கிரஸ அரசாங்கத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாகத் தெரியவருகின்றது. கடந்த 2000 ஆம் ஆணடு பெப்ரவரி மாதத்துடன் குடாநாட்டில் உள்ள 17 உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக் காலமும் முடிவடைந்தது.

பின்னர் இது 2002 பெப்ரவரி வரையும் தொடர்ந்து அதற்குப் பின்பும் மீண்டும் இச்சபைகளின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டது. இந்தப் 17 சபைகளில் ஒன்பது சபைகளின் நிர்வாகத்தை ஈ.பி.டி.பியே நடத்தி வருகின்றது.

பிரதேச சபைகளுக்கான கடமையிலிருந்து விலகி ஈ.பி.டி.பி. என்ற கட்சிக்கான பணிகளையே இந்த உள்ளூராட்சிச் சபைகள் செய்து வருகின்றன. இதனால், குடாநாட்டிலுள்ள உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலத்தை அரசாங்கம் நீடிக்கக் கூடாது என அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி அரசாங்கத்தைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார். (01)

## 41 சிறுவர்கள் புலிகளால் ஒப்படைப்பு

(கொழும்பு நிருபர்)

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியில், தம்முடன் இணைய வந்த - 16 வயதுக்குட்பட்ட 41 சிறுவர்களைப் புலிகள் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (01)

## பல்கலைக்கழகங்களில் நிதி நெருக்கடி

(கொழும்பு)

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் பலவற்றுக்குப் பெரும் நிதி நெருக்கடி உருவாகியுள்ளது.

இதனால், இப்பல்கலைக்கழகங்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளன. இவ்விடயம் தற்போது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

### ரணில் மிரட்டியதாக சந்திரிகா உரை

## ஜனாதிபதி - பிரதமரின் வாக்குமூலங்கள் இரகசியப் பொலிஸாரால் பெறப்படும்

(கொழும்பு)

பிரதமர் ரணில் துப்பாக்கியைக் காட்டித் தன்னை மிரட்டினார் என அனுராதபுரத்தில் ஜனாதிபதி கூட்டமொன்றில் உரையாற்றியது தொடர்பாக அவரிடமும், பிரதமரிடமும் பொலிஸார் வாக்கு மூலங்களைப் பெறவுள்ளதாக, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தலைவி என்ற நிலையில் ஜனாதிபதிக்கு உச்சப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எமது கடமை. ஜனாதிபதி இப்படியானதொரு குற்றச்சாட்டை விடுத்திருக்கும்போது பாரபட்சம் பாராது விசாரணைகளை நடத்த வேண்டியுள்ளது.

பிரதமர் ஒருபோதும் துப்பாக்கியைக்காட்டி மிரட்டவில்லை. எனினும், ஜனாதிபதியே இத்தகையதொரு குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ள நிலையில், பிரதமரிடமும் இரகசியப் பொலிஸார் வாக்குமூலத்தைப் பதிவுசெய்வர் என ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்தார்.

## கல்வியியல் கல்லூரிகளில் மூவாயிரத்து ஐந்நூறு பயிலுநர் ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் 3500 பயிலுநர் ஆசிரியர்கள் அடுத்த வருடம் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கிறார்கள். இவர்களுக்கான பயற்சி அடுத்த மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாக இருக்கின்றது.

அத்துடன், கல்வியியல் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கான வயதெல்லை 25 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## கணினி மயமாகும் வாக்காளர் பட்டியல்

(கொழும்பு)

தேர்தல் திணைக்களம் வாக்காளர் பட்டியலைக் கணினி மயப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் அருந்தவச்செல்வம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் திணைக்களத்தின் செயற்பாடுகளை இலகுபடுத்தி விரைவுபடுத்துவதற்காக முதற்கடடமாகக் கொழும்பு மாவட்ட வாக்காளர் பட்டியல் கணினி மயப்படுத்தப்படவுள்ளது. தொடர்ந்து இப்பணி ஏனைய மாவட்டங்களுக்கும விஸ்தரிக்கப்படும் எனவும் உதவித்தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## மிகச்சிறிய நூலாக சிறுவர் உரிமைப் பட்டயம்

(யாழ்ப்பாணம்)



ஐக்கிய நாடுகள் சபையின் 'சிறுவர் உரிமைகள் பட்டயம்' மிகச் சிறிய நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இந்த மிகச் சிறிய நூலை வெளியிட்டுள்ளது. நான்கு சென்ரிமீற்றர் நீளமும், மூன்று சென்ரிமீற்றர் அகலமும் கொண்டதாக இப்புத்தகம் வெளியாகியுள்ளது.

இன்னமும் சற்றுச் சிறியதாக இப்புத்தகத்தை வெளியிட முயற்சி செய்தால் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துவிடலாம். (க)

## சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை

(கொழும்பு)

தற்போதைய நாட்டு நிலைமைகள் குறித்து ஆராய சர்வகட்சி



மாநாடு ஒன்றைக் கூட்டுவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆலோசகர்களுடன் ஆராயந்து வருகிறார்.

சர்வகட்சி மாநாடு ஒன்றுக்கு அழைப்பு விடுவது குறித்து சந்திரிகா ஆலோசனை நடத்தியுள்ளார். ஏற்கனவே நடந்த சர்வகட்சி மாநாடுகள் குறித்த தகவல்கள், ஆவணங்களைத் தமக்குத் தருமாறு ஜனாதிபதி தனது ஆலோசகர்களைக் கேட்டுள்ளார்.

முன்னர், ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாஸ ஆகியோர் இத்தகைய சர்வகட்சி மாநாடுகளை நடத்தியிருந்தபோதும் அவை இரண்டுமே தோல்வி கண்டிருந்தன.

சமாதான முயற்சிகளில் புலிகளின் நிலைப்பாடுகள் மற்றும் ஏனைய கட்சிகளுக்கும் இடமளிப்பது என்பன குறித்து சர்வகட்சி மாநாட்டில் ஆராய்வதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## பொ.ஐ.மு.கட்சியிலிருந்து விலக கம்யூனிஸ்ட் கட்சி முஸ்தீபு!

ஏழு வருட காலமாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து பணியாற்றியபோதும் நாட்டுக்கு எந்தவித நற்பலனையும் செய்துகொடுக்க முடியவில்லை என, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார். கம்யூனிஸ்ட் கட்சியின் 17 ஆவது வருடாந்த கூட்டத்திலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டில் இருந்து விலகித் தனியாக அரசியலில் ஈடுபடுவதா? என்பது பற்றிய தீர்மானம் ஒன்று விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் ஆளுமை சம்பந்தமாக தொலைநோக்கின் அடிப்படையிலான திட்டத்தையும் பொ.ஐ.மு. அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என்று தெரிவித்த டியூ குணசேகர,

ஏனைய இடதுசாரிக்கட்சிகளுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவது சம்பந்தமாக மாற்றுத் திட்டமொன்று கம்யூனிஸ்ட் கட்சி சமர்ப்பிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் அடுத்தவாரம் யாழ்.வருகிறார்

(கொழும்பு)

ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு, கொழும்புவரும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொறிகோ கவாகுச்சி யாழ்ப்பாணத்துக்கும் வருகை தரவுள்ளார்.

ஜனவரி மாதம் 5ஆம் திகதி இவர் கொழும்பு வரவுள்ளார். இவர் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களைச் சந்திக்கவுள்ளதுடன் யாழ். குடாநாட்டுக்கும் விஜயம் செய்து இங்குள்ள நிலைமையை அவதானிக்கவுள்ளார்.

1987ம் ஆண்டுக்குப் பின்னர் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு வருவது இதுவே முதற்தடவையாகும். (க)

## ஜனாதிபதியின் கையெழுத்துடன் காணி உறுதி கண்டி 'மினி கச்சேரியில்' கண்டுபிடிப்பு

(கொழும்பு நிருபர்)

கண்டியில் சட்டவிரோதமாக இயங்கிவந்த 'மினிக்கச்சேரி' ஒன்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இக்கச்சேரியில் ஜனாதிபதியின் கையெழுத்துடன் காணப்பட்ட காணி உறுதிகள் சில கண்டுபிடிக்கப்பட்டன.

அத்துடன் உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலரின் ஒப்பங்களுடன் சில ஆவணங்களும், இறபபர் முத்திரைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. (01)

## வங்குரோத்து நிலையில் ஹக்கீம் அவரையா பேச்சுக்கு அனுப்புவது

### கேள்வி எழுப்புகிறார் அதாவுல்லா

(கொழும்பு)

அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அரசியல் வங்குரோத்து நிலை வெளிப்படையாகியுள்ளதால், தாய்லாந்தில் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் தரப்பில் சுயாதீனமான குழுவொன்று கலந்துகொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் எனப் பிளவுபட்ட முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் நடைபெறவுள்ள அடுத்த கட்டப் பேச்சுக்களில் மிக முக்கியமான விடயங்கள் ஆராயப்படவுள்ளன. இதில் முஸ்லிம்களின் தரப்பிலிருந்து சுயாதீனமான ஒரு குழு பங்குபற்ற வேண்டும்.

முஸ்லிம்களின் உரிமை குறிதது இப்போது, பேச்சுக்களை நடத்தாது விட்டால் வட- கிழக்கு இணைந்ததான ஒரு சமஷ்டி நிர்வாக அமைப்பு புலிகளிடம் கையளிக்கப்படும்போது, முஸ்லிம்கள் கிழக்கு மாகாணத்திலிருந்து வெளியேற வேண்டிய நிலை வரலாம் என்று அதாவுல்லா மேலும் தெரிவித்துள்ளார்.

## நிரந்தர நியமனம் வழங்கக்கோரி தொண்டராசிரியர்கள் போராட்டம்!

(சுன்னாகம்)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர், நிரந்தர நியமனம் வழங்கப்படாவிட்டால் தொடர்ச்சியான பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவிருப்பதாக யாழ். மாவட்டத் தொண்டராசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள தொண்டராசிரியர் சங்கம் மேற்கொள்ளவுள்ள பகிஷ்கரிப்புப் போராட்டத்துடன், யாழ்..மாவட்டத் தொண்டராசிரியர்கள் சங்கமும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நட்த்தத் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பகிஷ்கரிப்புத் தொடர்பாக யாழ்.மாவட்டத் தொண்டராசிரியர் சங்கம், வன்னிப் பெருநிலப்பரப்புத் தொண்டராசிரியர் சங்கத்துடன் தொடர்புகொள்ளவிருப்பதால் - தொண்டராசிரியர்களை இல.16, 3ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# 100 கடற்தொழில் இறங்குதுறைகள் யாழ்ப்பாணத்தில் நிறுவ ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள அனைத்துக் கடற்தொழில் இறங்குதுறைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்காக கிராமங்கள் தோறும் கடற்தொழில் இறங்குதுறை அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடற்தொழில் நீரியல்வள அமைச்சின் பணிப்பின் பேரில் இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கிராம், பிரதேச, மாவட்ட, தேசிய மட்டங்களில் அமைக்கப்படும் இக் குழுக்கள் கிராமிய மட்டத்திலான கடற்தொழில் சமூகத்தினுடைய அபிவிருத்தியை மையமாகக் கொண்டு செயற்படவுள்ளன.

குடாநாட்டில் நூறு கடற்தொழில் இறங்குதுறைகளில் அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கப்பட்டு, இறங்குதுறைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒவ்வொரு துறைக்கும் பத்து லட்சம் ரூபா செலவில் வேலைத் திட்டங்களைச் செய்வதற்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக கடற்தொழில் நீரியல்வள திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ச,கி)

# உரும்பிராய் மாணவியின் மர்ம மரணம்

# நீதியான தீர்ப்பு வரும் வரை பாடசாலை திறக்கப்படமாட்டாது

## அதிபர் உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பாடசாலை மாணவியின் மர்ம மரணம் தொடர்பான நீதியான தீர்ப்பு வரும்வரை, பாடசாலையைத் திறக்க அனுமதிக்க மாட்டேன் என்று அப்பாடசாலை அதிபர் மறியற் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் உறுதிக் கடிதம் வழங்கியுள்ளார்.

மேற்படி மாணவியின் சடலத்தை அடக்கம் செய்யாது தொடர் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக பொது மக்கள் கூறியதை அடுத்தே, பாடசாலை அதிபர் இந்த உறுதிமொழியினை வழங்கியதாகத் தெரிய வருகின்றது.

மேலும் மறியற்போராட்டத்தல் ஈடுபட்ட மக்கள் பாடசாலையின் பிரதானவாயிலைப் புதிய பூட்டுப் போட்டுப் பூட்டி வைத்துள்ளனர்.

இதேவேளை,

மாணவியின் சடலம் உரும்பிராய் - மருதனார்மடம் பிரதான வீதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பந்தலிலே மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நேற்று முன்தினம் மாலை சடலம் அடக்கம் செய்யப்பட்டது. (கி,ச)

# மாணவர் சீருடை வழங்க துரிதகதியில் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் வழங்குகின்ற பணி துரிதகதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்குரிய விநியோகக் கூப்பன்களும், அட்டைகளும் அவ்வப்பகுதிக் கிராமசேவை அலுவலர்கள் மூலமாக விநியோகிக்கபபட இருக்கின்றன.

அடுத்த தவணை பாடசாலை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகப் பாடசாலை மாணவர்களுக்குரிய இலவச சீருடை விநியோகம் முழுமையாக பூரணமாவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மோட்டார் சைக்கிளிலிருந்து வீழ்ந்து பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட மகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட செய்திகேட்டு மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்கு வந்த தாயொருவர் மயக்கமடைந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்தார்.

நல்லூர் வீதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில், உடுப்பிட்டியைச் சேர்ந்த அ.இராசமலர் (வயது 46) என்பவரே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ச,கி)

# சேதமுற்ற வீடுகளின் கூரைகள், கதவுகள் கசிப்பு உற்பத்திக் குழுவினால் சூறை

## புன்னாலைக்கட்டுவன் வடக்கில் சம்பவம்

புன்னாலைக்கட்டுவன் வடக்குப்பகுதியில் சேதமடைந்த நிலையி லுள்ள வீடுகளின் கூரைகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் கழற்றப்பட்டு கசிப்பு உற்பத்திக்கு விறகிற்காகப் பயன்படுத்தப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை இப்பகுதியில் வீட்டுக் கூரைகள் கழற்றப்படும் சத்தம் கேட்டு விவசாயிகள் சம்பவ இடத்திற்குச் சென்று சிலரை மடக்கிப்பிடித்தபோதே இவ்விடயம் அம்பலமாகியது.

ஏழு பேரைக்கொண்ட இக் குழுவில் மூவரே அன்றைய தினம் வீட்டுக் கூரைகளைக் கழற்றும் செயலில ஈடுபட்டதாகவும், அவர்களிடம் கசிபபு உற்பத்திக் குழுவினரின் பெயர், விபரங்கள் பெறப்பட்ட பின்னர் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (83)

## சுன்னாகத்தில் தீர்க்கப்பட்ட வேட்டுக்கள்

(சுன்னாகம்)

பல நாட்களிற்குப்பின்னர் கேட்ட துப்பாக்கி வேட்டுச்சத்தங்களினால் சுன்னாகம் பகுதி மக்கள் பீதியடைந்தனர்.

கடந்த சனிக்கிழமை இரவு பதினொரு மணியளவில் சுன்னாகம் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினரால் திடீரென தீர்க்கப்பட்ட வேட்டுக்களாலேயே அப்பகுதி மக்கள் அச்சத்திற்குள்ளாகினர்.

(ந)

## பளைப் பிரதேசத்தில் கிராமங்கள் அபிவிருத்தி

(பளை)

பளைப் பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றன.

போரூட் நிறுவன உதவியுடன் முகாவில், கோயில்வயல் ஆகிய கிராமங்களும்,

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியுடன் தம்பகாமம் கிராமமும்,

சர்வோதய நிறுவன உதவியுடன் மாசார், அரசர் கேணி, சோரன்பற்று, கிராமங்களும் அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றன.

(115)

# சிங்கப்பூரிலிருந்து திரும்பிய மிலிந்த கதிர்காமரைச் சந்தித்துப் பேச்சு

சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்பிய கையோடு அமைச்சர் மிலிந்த மொறகொட, ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்தைகள் குறித்து விளக்கம் அளிக்கும் வகையில் இச்சந்திப்பு இடம்பெற்றது. இப்பேச்சுக்களின்போது, ஒஸ்லோவில் நடந்து முடிந்த பேச்சுவார்த்தையின் விபரங்கள், தாய்லாந்தில் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் கலந்துரையாடப்படும் விபரங்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல் என்பன போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

## வடமராட்சி சுருக்கெழுத்தாளர்களுக்கு

வேலையற்றோர்களை பதிவு செய்யுமுகமாக, வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் பழைய மாணவர்களை, இன்று 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்விச் சான்றிதழ், செயன்முறைப் பயிற்சி, அனுபவச் சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் கழகத்தில் ஒன்று கூடுமாறு கழகச் செயலாளர் க.வ.சிவச்சந்திரதேவன் கேட்டுள் ளார்.

# கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் நேர்முகத் தேர்வு

(ஊரெழு)

யாழ்.கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி பகுதிநேர விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பித்தோருக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன.

பயிற்சி நெறிகள் யாவும் ஜனவரி மாத நடுப்பகுதியில் இருந்து ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், புதிய பயிற்சிநெறிகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஒழுங்குகள் இடம்பெற்றுவருகின்றன. (96)

## அராலி வடக்கு மயானத்திற்கு புதிய கொட்டகை

(மானிப்பாய்)

நீண்ட காலமாக அராலி வடக்கு மயானத்திற்கு கொட்டகை வசதி இல்லாத காரணத்தினால் இறுதிக் கிரியைகளை நடத்துவதற்கும், மழைகாலத்திலும் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டன.

இது வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து,

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்ச நிதி மூலம் புதிய கொட்டகை அமைக்கும் வேலை பூர்த்தியாகிவிட்டதாக பிரதேசசபை தலைவர் வே.மகேந்திரன் தெரிவித்தார்.(100)

# யாழ். ஆஸ்பத்திரியில் பாதுகாப்புச் சோதனை

(வண்ணை)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கிளினிக் நோயாளர்கள், பாதுகாப்பு ஊழியரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே கிளினிக் நடைபெறும் விடுதிக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

கடந்த வாரம் இப்பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தின் பின்னரே, பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காக இச் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (111)

## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்றில் HAPPY BIRTHDAY



பெயர் : இ. ஹரீசன்
முகவரி: கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு.

அகவை ஒன்றில்



பெயர் : ஸ்ரீ. சஞ்சீபன்
முகவரி: புதுத்தோப்பு, அச்சுவேலி வடக்கு.

அகவை மூன்றில்



பெயர் :வீ.விஜய்
முகவரி: பொன்மணி வாசா, கரவெட்டி.

அகவை எட்டில்



பெயர் : சி.அனுப்பிரியா
முகவரி: பொன்மணி வாசா, கரவெட்டி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:-----------------------------------


முகவரி:-----------------------------------

பிறந்த ஆண்டு:-----------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

---------------------------
பெற்றார் ஒப்பம்

# 2002- ஓர் மீள் பார்வை













## ஜனவரி

**01-** அரசு-புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணை வழங்குமாறு தலைவர் பிரபா நோர்வே அரசுக்கு உத்தியோகபூர்வ அழைப்பு.
போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சர் காமினி அத்துக்கோரள மாரடைப்பால் மரணம்.

**02-** அத்துருகிரிய ஆயுதக் களஞ்சியம் பொலிஸாரால் கண்டுபிடிப்பு. புலிகளின் பிரதேசத்துக்குள் ஊடுருவித் தாக்கும் இராணுவ அணியின் செயற்பாடு அம்பலம்.

**04-** கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை, நோர்வே தூதுக் குழுவைச் சேர்ந்த ஹெல்கிசன், சொல்ஹெய்ம் லண்ட னில் சந்தித்து- புலிகள் மீதான தடை நீக்கம், பொருளா தாரத் தடை நீக்கம், மீன்பிடி போக்குவரத்து கட்டுப்பாடு களை நீக்குவது தொடர்பாக 3 மணிநேரம் பேச்சு.

**07-** ஊடகவியலாளர் நிமலராஜன் கொலைவழக்கில் தேடப்பட்ட சந்தேக நபரான மதனராஜன் சரண்.

**10-** நோர்வே தூதுக்குழு ரணில் தலைமையிலான அரச குழுவுடன் பேச்சு

**16-** யாழ்.மேயராக செ.கந்தையன் பதவியேற்பு.

**17-** யாழ்.பல்கலைக்கழகத்தில் பொங்குதமிழ் நிகழ்வு

**20-** ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை புலிகள் மேலும ஒரு மாதத்துக்கு நீடிப்பு.

**21-** பிரபாவின் பணிப்பில் 10 சிங்களப் போர்க் கைதிகள், புலிகளால் விடுவிப்பு.

**21-** அரசின் மோதல்தவிர்ப்பு ஒரு மாதம் நீடிப்பு.

**22-** நோர்வே தூதுக்குழு- பாலா, லண்டனில்யுத்த நிறுத்த உடன்பாடு குறித்துப் பேச்சு.

**24-** வடக்கு கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்தி வைப்பு

**26-** போர்க்கைதிகள் விடுவிப்பை அமெரிக்கா வரவேற்பு

**28-** நோர்வே தூதுக்குழு- பாலா லண்டனில் 3மணி நேரப் பேச்சு.

**30-** சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கக் கோரி மீனவர்கள் யாழ்.செயலகம் முன் மறியற் போராட்டம்.

## பெப்ரவரி

**02-** எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்ஷ தெரிவு.

**04-** சுதந்திரதினத்தன்று யாழ் - செய லகத்தில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது. மறியல் செய்த மீனவர்கள நடவடிக்கை.

**06-** வடக்கில் குறிப்பிட்ட பிரதேசங்களில் மீன்பிடித் தடையை விலக்க அரசு முடிவு - மீனவர்களின் மறியற் போர் நிறுத்தம்.

**07-** கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்று திறப்பு.

**08-** உள்ளூராட்சித் தேர்தல்கள் அறிவிப்பு.

**09-** உடதலவின்ன படுகொலைகள் தொடர்பாக ரத்வத்தவை 4ம் மாடியில் பொலிஸார் விசாரணை.

**10-** ஏ-9 வீதி, பெப். 15 இல் திறக்கப்படும் என அரசியற்துறை அறிவிப்பு.

**11-** குடாநாட்டுக்கு செல்வதற்கான பாதுகாப்பு அனுமதி நடைமுறை நீக்கம்.

**13-** வடக்கே மருந்து எடுத்துவருவதற்கான கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கம்.

**15-** பயண அனுமதி முறை குடாநாட்டில் நீக்கம். ஓமந்தை - உயிலங்குளம் வீதிகள் போக்குவரத்துக்கு திறப்பு

**18-** மட்டக்களப்பில் கரிகாலன் - தொண்டமான் சந்தித்துப் பேச்சு.

**19-** மட்டக்களப்பில் பொங்குதமிழ்.
அனுருத்த ரத்வத்த ராஜகிரியவில் கைதாகி விளக்க மறியல்.

**21-** வரலாற்றுச் சிறப்புமிக்க புரிந்துணர்வு உடன்பாட்டில் தலைவர் பிரபா - ரணில் கைச்சாத்து.
வவுனியா - புளொட் முகாமில் துப்பாக்கிச்சூடு. 5 பேர் பலி.
முல்லைக்கடலில் கடற்புலிகள் - கடற்படை சமர். 3 கடற்படையினர் பலி. 4 பேர் காயம். கடற்கரைப் பகுதி குடியிருப்புக்கள் மீது குண்டு வீச்சு. 5 பேர் காயம். மக்கள் இடம் பெயர்வு.

**22-** புரிந்துணர்வு உடன்பாடு அரசாங்கத்துக்கு முரணானது என சந்திரிகா அறிவிப்பு. கவலை தெரிவிப்பு.

**23-** இன்று நள்ளிரவு முதல் யுத்த நிறுத்தம் அமுல்.

**27-** யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் பாலாவுடன் சந்திப்பு.

## மார்ச்

**01-** வவுனியாவில் பொங்குதமிழ். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் உணர்ச்சியுடன் பங்கேற்பு.

**02-** போர் நிறுத்த உடன்பாட்டை முறிக்க சந்திரிகா-கதிர்காமர் சதி - புலிகள் குற்றச்சாட்டு.

**04-** புரிந்துணர்வு உடன்பாடு குறித்து ரணில் நாடாளுமன்றில் விளக்கம்.

**05-** வவுனியாவில் 11 வருடங்களாக இருந்த பாஸ் நடைமுறை முற்றாக நீக்கம்.

**06-** கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் - பிரபா கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு. உடன்பாடு வரலாற்றுச் சாதனை என பிரபா விபரிப்பு.

**08-** புலிகள் தரப்பு யுத்த நிறுத்த மாவட்ட கண்காணிப்பாளர்கள் நியமிப்பு.
கட்டுவனில் படையினரின் ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறியது.

**14-** இரு நாள் விஜயமாக ரணில் யாழ்ப்பாணம் வருகை.

**15-** அமெரிக்க உதவி அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா குடாநாட்டுக்கு விஜயம்.

**19-** திருமலையில் பொங்குதமிழ் நிகழ்வு. வரலாறு காணாத சனசமுத்திரம்.

**20-** வவுனியாவில் படையினரின் ஆயுதக் கிடங்கு வெடி த்து நாசம்.
உள்ளூராட்சித் தேர்தல் 7 மாகாணங்களில் நடந்தது. 222 சபைகளில் 217 ஐ ஐ.தே.க. 'வென்றது.
வட,கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு.

**22-** 7 வருடங்களின் பின் கோப்பாய் துயிலும் இல்லத்தில் அஞ்சலி.

**23-** தமிழீழக் காவல்துறையின் 10 வது ஆண்டு நிகழ்வில் பிரபா பங்கேற்பு. செங்கம்பள வரவேற்பு.

**25-** பாலா . அடேல் இரணைமடுவில் கடல் விமானம் மூலம் தரையிறக்கம். பிரபா நேரில் வரவேற்பு.

**29-** அரசு - புலிகள் நேரடிப் பேச்சு தாய்லாந்தில் நடைபெறும் என ஹெல்கிசன் அறிவிப்பு

## ஏப்ரல்

**01-** புலிகளின் முதலாவது அரசியல் பணிக்குழு வவுனியா வருகை. பொதுமக்கள் ஆரவார வரவேற்பு.
ஏ-9 வீதியில், முகமாலையில் கண்ணிவெடி அகற்றும் பணி ஆரம்பம்.

**03-** வவுனியாவில் புலிகளின் அரசியல் அலுவலகம் திறப்பு.

**08-** ஏ- 9 வீதிப் போக்குவரத்து திறப்பு.
இளம்பரிதி உட்பட 15 போராளிகள் அரசியல் பணிக்காக யாழ். வருகை. 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் மாபெரும் வரவேற்பு.

**09-** திருமலையில் புலிகளின் அரசியல்குழுவுக்கு பலத்த வரவேற்பு.

**10-** பிரபாகரன் கிளிநொச்சியில் செய்தியாளரைச் சந்திப்பு. 350 இற்கு மேற்பட்ட செய்தியாளர் கலந்து கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தியாளர் மாநாடு.

**12-** கூட்டமைப்பு எம்.பிக்கள் கிளி நொச்சியில் பிரபாவைச் சந்தித்து, புலிகளின் வழிநடத்தலில் ஒன்று பட்டுச் செயற்பட இணக்கம்.
தீவுப்பகுதிக்குச் சென்ற புலிகளை கடற்படை திருப்பி அனுப்பியது.
புலிகளின் அரசியற்குழு மட்டுநகர் சென்றது.

**13-** முஸ்லிம் பிரதிகள் புலிகள் சந்திப்பு.
பிரபா-ஹக்கீம் புரிந்துணர்வு உடன்பாட்டில் கைச்சாத்து.

**14-** சந்திரசேகரன், தொண்டமான் பிரபாவைச் சந்திப்பு.

**15-** கொக்குவில் புலிகளில் அரசியற்துறைச் செயலகம திறப்பு.

**17-** யாழ்ப்பாணத்தில் உணர்வுமிகு பொங்குதமிழ்.

**19-** நெடுந்தீவில் பொங்குதமிழ்.

**20-** நீர்கொழும்புச் சிறையில் உண்ணாவிரதம் இருந்த தமிழ்க் கைதி மரணம். இருவர் மயக்கம்.

**22-** சமாதான முயற்சிகளுக்கு எதிராக பிக்குகள் அலரிமாளிகை நோக்கிப் பேரணி.

**24-** பாலா தம்பதிகள் கடல் விமானம் மூலம் மாலைதீவு சென்று, அங்கிருந்து லண்டன் பயணம்.

## மே

**01-** வாகரைக் கடலில் கடற்படை தாக்குதல். மீன்பிடிப் படகு நாசம்.

**09-** சமாதானத்தைக் குழப்ப கடற்படை முனைவதாக தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு.
கண்காணப்புக்குழுத் தலைவர்-தமிழ்ச்செல்வன், ஏ-9 வீதிப போக்குவரத்துக் குறித்து ஆராய்வு.

**10-** ஏ-9 போக்குவரத்தை சீர்படுத்துவது குறித்து ஓமந்தையில் புலிகள்- படையதிகாரிகள் பேச்சு.

**14 -** புலிகள் மீதான தடையை இந்தியா மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடிப்பு.

**15-** வலி-வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு வலி-வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக அடையாள உண்ணாவிரதம்.

**16-** தீவக நிலைமை குறித்து அமைச்சர் மிலிந்த, கடற்படை அதிகாரிகளுடன் நேரில் ஆராய்வு.

**21-** 2ஆம் கட்டமாக நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் 17 சபைகளில் கொழும்பு மாநகரசபை உட்பட 15 சபைகளை ஐ.தே.க கைப்பற்றியது.
இயல்புநிலையை உருவாக்குவது குறித்து அரசபிரதிநிதிகள் - புலிகளுடன் கிளிநொச்சியில் பேச்சு.

**23-** படையினரை வெளியேற்றக் கோரி ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் மறியற்போராட்டம்.

**24-** 18ஆவது அரசியல் திருத்த விபரம் வெளியிடப்பட்டது.

**26-** கடற்கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் 18 பேர் கொழும்பு வருகை.













## ஜூன்

02- திருமலையில் கடற் கண்காணிப்பு பணி ஆரம்பம்.

05- கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் மரணம்

07- சிவசிதம்பரத்தின் உடலுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி.

06- மாணவர் எழுச்சி தினம் அனுஷ்டிப்பு.
சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கக் கோரி



குடாநாட்டு மீனவர் யாழ்.செயலகம் முன்பாக மறியற் போராட்டம்.

09- சிவசிதம்பரத்தின் இறுதிக் கிரியைகள் நடைபெற்றது.
இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவின் பதவி- ஒரு வருடம் நீடிப்பு.

10- படையினரை வெளியேறக் கோரி ஹாட்லி, மெதடிஸ்த மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு

11- ரணில் - வாஜ்பாய் டில்லியில் சந்திப்பு.
இலங்கை- அமெரிக்கா, திறந்த வான்பரப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்து.

12- புரிந்துணர்வு உடன்பாட்டு விதிகளை முறையாக அமுல் நடத்தக்கோரி குடாநாட்டில் பூரண ஹர்த்தால்.

13- குடாநாட்டு மீனவர்கள் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்த அரசு இணக்கம்.

17- தீவகத்துக்கு புலிகள் பிரவேசம்.

19- வலி. வடக்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி மறியற்போர்.

23- கூட்டணித் தலைவராக ஆனந்தசங்கரி தெரிவு.புதிய எம்.பியாக துரைரட்ணசிங்கம் நியமனம்.

25- புலிகளின் மூதூர் அலுவலகம் தாக்கப்பட்டதைக் கண்டித்து திருமலையில் ஹர்த்தால். மூதூரில் கலவரம். ஊரடங்கு அமுல்.

28- மட்டு - அம்பாறைப் பகுதிகளில் கலவரம் நிலவியது. ஊரடங்கு அமுல் 6 பேர் பலி 100 பேர் வரை காயம்.
மாடு மேய்க்கச் சென்ற இளைஞன் எழுதுமட்டுவாளில் படையினரின் சூட்டுக்குப் பலி

29- கிழக்கில் பதற்றத்தைத் தவிர்க்க புலிகள் படையதிகாரிகள் சந்திப்பு.

30- தங்காலைச் சிறையில் ஆயுதங் களஞ்சியத்தை கைப்பற்றி கைதிகள் தப்பியோட்டம்

## ஜூலை

01- தங்காலைச் சிறைக்கலகம் பேச்சுக் களின் மூலம் முடிவு. பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்ட படையினர் விடுவிப்பு.

03- ஐந்து போராளிகள் திருமலையில் கைது.


05 - விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி ராஜினாமா.

08 - தீவக கடற்படைத் தளபதி கொமாண்டர் சந்திரசிறி இடமாற்றம்.

11- காரைதீவில் புலிகள் உறுப்பினர் அதிரடிப்படையால் கைது.
இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா கொழும்பு வந்து ரணிலுடன் பேச்சு.

12 - சர்ச்சைக்குரிய பிரதேசங்களில் ஹர்த்தால் நடத்துவதற்குத் தடை, பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு.

15 - புரிந்துணர்வு உடன்பாட்டை அமுல் நடத்தக்கோரி தென்மராட்சியில் பேரணி.
செங்கலடி-பதுளை வீதி 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் திறப்பு.




16 - கடற்புலிகளின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா வன்னியில் நடந்தது. பிரபா கலந்து கொண்டார்.

18- முகமாலையில் படையினரின் ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறியது.
ஜனாதிபதி செயலக வாகனக் கொள்வனவில் மோசடி. அமைச்சரவை உபகுழு அறிக்கை.

19- சந்திரிகா-ரணில் 1 1/2 மணி நேரம் பேச்சு.
பிரச்சினைகள் தொடர்பாக இணக்கம் ஏற்படவில்லை.
புலிகள்- அரசு பேச்சில் இந்தியா மத்தியஸ்தம் செய்ய வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை.

20- வலி. வடக்கில் உடனடி மீள் குடியமர்வு சாத்தியமல்ல என ஒஸ்ரின் அறிவிப்பு.
ரணில் அமெரிக்கா விஜயம்.

24- சந்திரிகாவின் புலனாய்வுக் கமரா அடங்கிய கைப்பை விவகாரத்தால் நாடாளுமன்றத்தில் கைகலப்பு.

## ஓகஸ்ட்

02- யாழ்.நகரில் வர்த்தகக் கண்காட்சி ஆரம்பம்.

03- கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ்ச்செல்வனைச் சந்திப்பு - இணைந்து செயற்பட இணக்கம்.

05- ஜனாதிபதியுடன் சுமுக நிலையை ஏற்படுத்த ஐ.தே.க கூட்டத்தில் முடிவு.
கிழக்கு அரியாலையில் ட்ரக்டர் அமுக்க வெடியில் சிக்கி சாரதி பலி. மற்றொருவர் படுகாயம்.

06- அரசுடன் இணைந்து செயற்பட முன்வருமாறு சந்திரிகாவுக்கு ரணில் பகிரங்க அழைப்பு.
ஜப்பானியத் தூதுவர் தமிழ்ச்செல்வனைச் சந்திப்பு.

07- தமிழக அரசுக்கு எதிராக யாழ். நகரில் பேரணி.
மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி தென்மராட்சி மக்கள் மறியல்.
ஊடகவியலாளர் நிமலராஜன் கொலை தொடர்பாக மானிப்பாயில் ஒருவர் கைது.

09- நாடாளுமன்றைக் கலைக்கப் போவதி



ல்லை என சந்திரிகா அறிவிப்பு.
நோர்வேயின் விசேட அழைப்பின்பேரில் பாலா அங்கு விஜயம்.

10- நகர வீதிகளை போக்குவரத்துக்கு திறக்குமாறு கோரி யாழ்.நகரில் மறியற் போராட்டம்.

11- நிமலராஜன் கொலை தொடர்பாக யாழ். ஈ.பி.டி.பி அலுவலகத்தில் சோதனை. ஒரு பிஸ்ரல் மீட்பு.

12- புலிகளின் கடல் வழிப் பயணத்துக்கு அரசாங்கம் நிபந்தனைகளுடன் அனுமதி.

13- கடற்படைத் தளபதி தயா சந்தகிரியின் பதவி 3 வருடங்களால் நீடிப்பு.

14- பாலா - மிலிந்த நோர்வேயில் பேச்சு.
செப்ரம்பர் மாதம் சமாதானப் பேச்சை ஆரம்பிக்கத் தீர்மானம்.

15- வை - 8 சரக்கு விமானம் களுத்துறைக் கடலில் வீழ்ந்தது. 5 பேர் பலி.

16- நாரந்தனையில் கடற்படை அட்டகாசம். ஏழு பொதுமக்கள் காயம்.

18- முல்லைத்தீவு - வாகரைக்கு இடையில் புலிகளின் கடற்போக்குவரத்து ஆரம்பம்.

21- அரசுக்குப் பெரும்பான்மை இருக்குமாயின் நாடாளுமன்றைக் கலைக்கமாட்டேன் என



ஜனாதிபதி உறுதி.

22- சொல்ஹெய்ம் - பாலா லண்டனில் பேச்சு.
அமெரிக்க ராஜாங்க பிரதியமைச்சர் ஆர்மிரேஜ் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்.

23- சமாதானப்பேச்சுக்கள் தாய்லாந்தில் செப்ரெம்பர் 16, 17, 18 இல் நடைபெறும் என நோர்வே அறிவிப்பு.
அரசின் சமாதான செயலக செயலாளர் பேனாட் குணதிலக கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்.

25- 6 வருடங்களுக்கு பின்னர் ஆரியகுளம் வீதி போக்குவரத்துக்குத் திறப்பு.
புலிகளுடனான பேச்சில் அரசு சார்பில் அமைச்சர்கள் மிலிந்த, பீரிஸ், ஹக்கீம் பங்கேற்பதாக அரசு அறிவிப்பு.
புலிகளின் மூத்த தளபதியும், கிட்டு பீரங்கிப்படையணி சிறப்புத் தளபதியுமான கேணல் ராஜு புற்றுநோயால சாவு.

31- நிலைமையை அவதானிக்க பிரட்மன் யாழ்., கிளிநொச்சி விஜயம்.

## செப்ரம்பர்

01- புலிகள் மீதான தடைநீக்கம், இடைக்கால நிர்வாகம் இரண்டையும் தான் எதிர்ப்பதாக சந்திரிகா அறிவிப்பு.

02- பருத்தித்துறையில் மூடப்பட்டுள்ள வீதிகளைத் திறக்கக் கோரி மாணவர்கள், பொது மக்கள் போராட்டம், தடைகள் தகர்ப்பு, காவலரண்கள் நாசம். ஹாட்லி, மெதடிஸ்ட் ஆகிய பாடசாலைகளை மூட முடிவு.

03- சந்திரிகா-ரணில் சந்திப்பு.
லண்டனில் பாலா - ஹக்கீம் சந்திப்பு.

04- புலிகள் மீதான தடையை நீக்குவதென அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம். நள்ளிரவு முதல் தடை நீக்கம்.

06- கேணல் ராஜுவின் உடலுக்கு பிரபா அஞ்சலி.

07- பருத்தித்துறை படை நிலைகள் மாற்றியமைக்கப்படமாட்டாது என ஒஸ்ரின் பெர்ணாண்டோ அறிவிப்பு.
புலிகள் மீதான தடை நீக்கம், சமாதானப் பேச்சு என்பவற்றை இந்தியா வரவேற்பு.

09- கேணல் ராஜுவின் வித்துடலுக்கு குடாநாட்டில் அஞ்சலி.
ஹாட்லி, மெதடிஸ்ட் பாடசாலைகள் மீளத் திறப்பு.
சமாதான முயற்சிக்கு ஆதரவாக கொழும்பில் பேரணி.

12- பருத்தித்துறை நாகர்கோவில் வீதியைத் திறப்பது குறித்து குடாநாட்டுப் படைத்தளபதிகளும் புலிகளின் தளபதிகளும் முகமாலையில் சந்தித்துப் பேச்சு.

14- பேச்சுக்களுக்காக அரச குழு தாய்லாந்து புறப்பட்டது.

16- தாய்லாந்தில் அரசு - புலிகள் சமாதானப பேச்சு ஆரம்பம்.

18- முதல் சுற்றுப்பேச்சு வெற்றிகரமாக நிறைவு.
மீள் குடியமர்வு, புனரமைப்பு பணிகளில் இணைந்து செயற்பட இணக்கம். இரு கூட்டுக் குழுக்கள் அமைக்கத் தீர்மானம்.

23- நெடுந்தீவில் கடற்படைத்தளம் அமைப்பு.
புலிகள் ஆட்சேபம்.


24- கண்காணிப்புக்குழு தலையீட்டையடுத்து நெடுந்தீவிலிருந்து கடற்படை விலகல்.

25- வெஸ்பேர்க் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு. புலிகள் சமாதான செயலகத்தை அமைக்க இணக்கம்.
திருமலையில் புலிகளின் பிரதேசத்துக்குள் ஊடுருவிய ஏழு படையினர் புலிகளால் கைது.

27- யாழ்.-கொழும்பு பஸ் புத்தளத்தில் விபத்து. 4 பேர் பலி. 52 பேர் படுகாயம்.

28- ஓமந்தையில் கைதிகள் பரிமாற்றம்.
11 புலிகளும், 7 படையினரும் விடுவிப்பு.

## ஒக்ரோபர்



01- 'நமது ஈழநாடு' வெளிவர ஆரம்பித்தது.

02- களுத்துறைச் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதத்தில் 139 தமிழ் கைதிகள் குதிப்பு.

03- புலிகளின் நீதி நிர்வாகத்திறனை ஜேர்மன் நீதிபதிகள் குழு பாராட்டு.

04- அமெரிக்க இராணுவ அதிகாரிகள் சீருடையில் வவுனியாவுக்கு விஜயம்.
தமிழ் அரசியற்கைதிகளை விடுவிக்க ரணிலிடம் விடுதலைப்புலிகள் கோரிக்கை.

05- புலிகளிடம் சரணடைந்த படைச்சிப்பாய் கண்காணிப்புக் குழுவிடம் கையளிப்பு.

06- நெடுந்தீவில் ஈ.பி.டி.பி அலுவலகம் மக்களால் தீவைப்பு.

07- நெடுந்தீவிலிருந்த ஈ.பி.டி.பியினர் சகலரும் பொதுமக்கள் எதிர்ப்பினால் வெளியேற்றம்.

09- புனரமைப்பில் நெருங்கிச் செயற்பட ஜப்பான் - புலிகள் பேச்சில் இணக்கம்.
அம்பாறை காஞ்சிரங்குடாவில் எஸ்.ரி.எவ். கண்மூடித்தனமாகச் சுட்டதில் ஏழு பொது மக்கள் பலி.
களுத்துறை தமிழ்க் கைதிகளின் போராட்டம் இடைநிறுத்தம்.

11- யாழ்.குடாநாட்டில் ஹர்த்தால்.
வீதிமறியலில் ஈடுபட்ட தமிழ் மக்கள் மீது திருமலையில் காடையர் தாக்குதல். 3 பேர் பலி. 40 பேர் படுகாயம்.

13- ஐரோப்பிய ஒன்றியக் குழு வன்னியில் பாலா, தமிழ்ச்செல்வனுடன் நேரடிச் சந்திப்பு

14- யாழ்.பல்கலைக்கழகத்தில் சிறப்புற நடந்த பட்டமளிப்பு. 1332 பேர் பட்டங்கள் பெற்றனர்.

15- இராணுவத்திற்கு ஆட்திரட்டல் ஆரம்பம்.
முஸ்லிம் இளைஞன் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்றில் ஊரடங்கு அமுல்.

19- மானுடத்தின் தமிழ்க்கூடல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்.

23- கிபிர் விமானம் விழுந்து நொருங்கியது.


29- புலிகளிடம் சரணடைந்த இளம் சிப்பாய் யாழ்ப்பாணத்தில் வைத்து மனித உரிமைக் ஆணைக்குழுவிடம் ஒப்படைப்பு.

30- புலிகள் குழு பேச்சுக்களுக்காக தாய்லாந்துக்குப் புறப்பட்டது.

31- மாளிகாவத்தையில் முஸ்லிம்- சிங்கள இனக்கலவரம். வீடுகள், கடைகள் லொறிகள் எரிப்பு.

## நவம்பர்

01 - மத்திய வங்கி குண்டு வெடிப்பு வழக்கில் பிரபாவுக்கு 200 வருட சிறை - கொழும்பு மேல் நீதிமன்று தீர்ப்பு.
கூட்டுச் செயலணிக்கான இறுதி வடிவம் பற்றி



தாய்லாந்தில் நடைபெற்ற 2 ஆம் கட்டப் பேச்சுக்களில் ஆராய்வு.

02- பிரபா மீதான நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு புலிகள் கடும் கண்டனமும் அதிர்ச்சியும் தெரிவிப்பு.
உயர் பாதுகாப்பு வலய நீக்கம் ஆராய 16 பேர் கொண்ட குழு அமைப்பு.
வடக்கு - கிழக்கு அபிவிருத்தி உபகுழு - புலிகள் தரப்பில் தமிழ்ச்செல்வன் நியமனம்.

09- பிரபாவுக்குச் சிறைத்தீர்ப்பு - எதிர்த்து யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து ஆர்ப்பாட்டம்.

13- கடற்படை - கடற்புலி தளபதிகள் முகமாலையில் சந்திப்பு.

17. ஈ.பி.டியினரை வெளியேறக்கோரி நெடுந்தீவு மக்கள் முற்றுகைப்போர்.

20. பாதுகாப்பு வலயங்களை நீக்க ஜனாதிபதி மறுப்பு.

24. அன்ரன் பாலசிங்கம் ஒஸ்லோ பயணம்.
பாதுகாப்பு, அரசியல் விவகாரங்கள் குறித்து ரணில்- பாலா அங்கு ஒரு மணிநேரம் பேச்சு.

25. 40 நாடுகள் பங்குபற்றும் உதவி வழங்கும் மாநாடு ஒஸ்லோவில் ஆரம்பம்

27. மாவீரர் தினம் அனுஷ்டிப்பு.

## டிசம்பர்

01- 3 ஆவது சுற்றுப் பேச்சுக்கள் ஒஸ்லோவில் ஆரம்பம்.

03. முஸ்லிம் காங்கிரஸ் விவகாரத்தில் ஹக்கீம் தலையிட நீதிமன்று தடை.

05. ஈ.பி.டி.பி அலுவலகங்களுக்கு முன் பரவலாக மக்கள் போராட்டம்.

07- அரசு - புலிகள் இணக்கம் பற்றி ஆராய இந்திய வெளியுறவுச் செயலர் வருகை.




10. காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம், மனித ஆணைக்குழு முன்மறியல்.
செஞ்சிலுவை அலுவலகத்துக்குப் பேரணி.

11. நெல்லியடியில மறியல் செய்த மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்.

12- நெல்லியடித் தாக்குதலைக் கண்டித்து குடாநாடு முழுவதும் ஹர்த்தால்.

14- முகமாலையில் பாதுகாப்புக் குழுக் கூட்டம்.
ஒரு வாரத்துக்குள் மீள்குடியமர்வு குறித்து அறிவிக்க அரசுக்குப் புலிகள் கால அவகாசம்.

15- புனர்வாழ்வுச் செயல்கம் திறப்பு விழா.
அபிவிருத்தி புனர்வாழ்வுக்குழு கிளிநொச்சியில் கூடியது. வெளிநாட்டு நிதியுதவியை கையாளல் பற்றி கிளிநொச்சியில் உயர்மட்ட ஆராய்வு.

17- புறக்கோட்டையில் பெரும் தீ விபத்து.
22 தமிழர்கள் பலி. 5 பேர் ஒரே குடும்பத்தவர்.

18- இராணுவ- கடற்படைத் தளபதிகள் யாழ். ஆயருடன் திடீர்சந்திப்பு.

21- மீள்குடியமர்வுக்கான திட்டவரைபு இராணுவத்தரப்பு கையளிப்பு.

23- வெஸ்பேர்க்கை நாடுகடத்துமாறு பிக்குகள் கொழும்பில் பேரணி.

26- மீள்குடியேற்ற நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதென புலிகள் அறிவிப்பு.

29- படையதிகாரிகளுடன் சந்திப்பு இனி எதுவுமில்லை. மீள்குடியேற்றம் பற்றி தாய்லாந்திலேயே பேச்சு என அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு.

# ஆய்வாளர்களின் மர்ம மரணம்

**1923** ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் எகிப்தில் லக்சோர் பகுதியில் எகிப்திய சக்கரவர்த்திகள் அடக்கம் செய்யப்பட்ட பள்ளத்தாக்கிலிருந்து துதன்காமனின் (**Tutankhamen's**) கல்லறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த கல்லறையில் இருந்த துதன்காமன் இளவரசனின் பிரேதப்பெட்டியைத் திறந்து ஆராய்ந்த மேற்குலகின் ஆராய்ச்சியாளர் குழு, தமது நாடுகளுக்குத் திரும்பியதும் மர்மமான முறையில், குறுகிய காலத்தில் அக்குழுவில் இடம்பெற்றிருந்தோர் அடுத்தடுத்து மரணமாகினர். இளவரசனின் ஆவி, தனது தூக்கத்தை கலைத்ததற்காக இவர்கள் மீது இட்ட சாபமே இந்த மரணங்களுக்குக் காரணம் என அப்போது பரவலாக செய்திகள் வெளியாகின. இதை ஆதாரமாகக் கொண்டு பல ஆங்கில நாவல்களும் திரைப்படங்களும் கூடத் தயாரிக்கப்பட்டன. ஆனால், இபபோது இவர்களின் மரணத்துக்கு காரணம் என்ன என்பதை ஆய்வாளர்கள் ஓரளவு கண்டறிந்துள்ளனர்.

1923 இல் இந்தக் கல்லறைக்குச் சென்ற குழுவில் இடம்பெற்ற லோட் கார்னலேன் என்பவருக்கு நுளம்பு ஒன்று கடித்த சில நாளிலேயே இறந்தார். அவர் இறந்த நாளில் இருந்து அவரின் வளர்ப்பு நாய் ஊளையிட்டபடியே இறந்தது என்றெல்லாம் அப்போது தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால், இப்போதோ- நுளம்பு கடித்த பகுதியில் அவருக்கு ஒருவகை தழும்புகளே ஏற்பட்டதாகவும், அவர் இரத்த அழுகல் நோயான செப்ரீசீமியா நோய் கண்டே இறந்ததாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இறக்கும்போது அவருக்கு நிமோனியா காய்ச்சலும் இருந்துள்ளது. இந்த நோய்த் தொற்றே ஏனைய ஆய்வாளர்களுக்கும் பரவி அவர்களும் சிகிச்சை கண்டுபிடிக்கப்படாத அந்தக்காலத்தில் இறந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிகின்றனர்.

இந்த ஆபத்துக்குள்ளான குழுவில் மொத்தமாக 25 பேர் இருந்துள்ளனர். மேலும் 19 பேர் கல்லறையிலிருந்த இளவரசனின் பிரேதப்பெட்டியைத் திறந்தவேளையில் அங்கு பிரசன்னமாயிருக்கவில்லை.




அவுஸ்திரேலிய மொனாஷ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மார்க் நெல்சன் இறந்த அந்த ஆய்வாளர்களின் வாழ்க்கை சரிதையை ஆராய்ந்து, அவர்கள் தமது இளம்வயதில் தானா இறந்துள்ளார்கள் என ஆய்வு செய்தார். பிரமிட்டினுள் பிரேதப்பெட்டியைத் திறந்த போது அங்கு நின்றவர்களினதும், அன்றைய தினம் அங்கு செல்லாதவர்களினதும் இறந்த திகதிகளை அவர் ஒப்பிட்டுள்ளார். இந்த ஆய்விலிருந்து பிரமிட்டினுள் நின்றவர்கள் முதிய வயதான 70 வயதைத் தொட்ட பின்னரே இறந்துள்ளனர். மிக இளவயதில் அல்ல என்பது தெரியவந்தது. ஆனால், அன்று கல்லறைக்குச் செல்லாத மற்றையவர்கள் 75 வயது வரை வாழ்ந்துள்ளனர்.

எனவே- அந்த எகிப்திய இளவரசனின் ஆவியின் சாபமே இவர்களின் மர்ம இறப்பிற்கு காரணம் எனக் கூறமுடியாது என்கிறார் டாக்டர் நெல்சன். இதன் மூலம் அந்த இளவரச ன் மீது விழுந்த கொலைப்பழி - கறை - நீங்கிவிட்டது என்கிறார் நெல்சன் நகைச்சுவையாக. இறுதியில் முத்தாய்ப்பாய் அவர் கூறுகிறார், "இத்தகைய கண்டுபிடிப்பு முயற்சிகளை அலட்சியமாகக் கையாண்டதே இத்தகைய சாவுகளுக்குக் காரணமாயிருக்கலாம்."

## இளவரசன் ஆவிதான் காரணமா?







# கணினி + தொலைபேசி

Treo 270 என்பது கையடக்கக் கணினி. அத்துடன், கையடக்கத் தொலைபேசியும்கூட. தற்போது பாவனையில் உள்ள சோனி எரிக்சன் T 68i, நோகியா 7650 போன்ற, வேறு கையடக்கக் கணினிகளுக்குப் போட்டியாகவே Treo 270 பாவனைக்கு வந்துள்ளது. பரந்ததும் தட்டையானதுமாக சாதாரண கையடக்கத் தொலைபேசி போன்ற வடிவத்தில் இந்த கணினி + தொலைபேசி வருகிறது.

இதைத் தொலைபேசியாகப் பகல்வேளையில் நீண்ட நேரத்துக்கு உபயோகித்தால், இரவில் அதை மீள்வலுவூட்டவேண்டியது அவசியம். கணினிப் பாவனையில் உள்ள வேளையில் தொலைபேசியைத் துண்டித்து வைத்தால், இதன் மின்கலத்தின் பாவனைக் காலத்தை நீடிக்கச் செய்யலாம்.

சர்வதேச வலையமைப்புடன் இக்கணினியையும் இணைத்துக் கொள்ள முடியும். 300 பவுண்ஸ் விலையில் இது கிடைக்கிறது.



## கையடக்கக் கருவி



# லண்டனில்

இவ்வாரம் லண்டன் விஞ்ஞான அரும்பொருட் காட்சியகத்தில், பிரிட்டனின் முன்னணி கம்பியூட்டர் விளையாட்டாளர்கள் பங்குபற்றும் போட்டி ஒன்று நிகழவுள்ளது. இதில் வெற்றி பெறுபவர் 25 ஆயிரம் பவுண்சைப் பரிசாகப் பெறுவார்.

பிரிட்டனில் உள்ள 16 முன்னணிப் போட்டியாளர்கள் பங்குபற்றும் இந்நிகழ்வில் 'கௌன்டர் ஸ்ரைக்', 'ரிடர்ன் ரு காசின்', 'வோர் கிராப்ட்' போன்ற வீடியோ விளையாட்டுக்களே பயன்படுத்தப்படவுள்ளன.

போட்டியின்போது மோசடிகள் ஏதும் செய்யப்படாது இருப்பதற்காக போட்டியாளர்கள் ஒரே வீடியோ இயந்திரத்தையே பயன்படுத்துவர். இப்போட்டிகளைப் பார்வையிடப் பொதுமக்களுக்கும் வசதி செய்துதரப்படும். இலவசமான அனுமதி என்றபோதிலும் முதல் வருபவர்களுக்கே முதலில் அனுமதியாம்.

## கணினி விளையாட்டுப் போட்டி



# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

## அரங்கம்- 13

அவருக்கு மௌனமொழிக் கலையும் தெரிந்திருந்தது. உதாரணத்துக்கு, 1916 இல் வெளிவந்த 'தி பான் ஷொப்' என்ற படத்தில் மறக்க முடியாத ஒரு காட்சி. அடகுக் கடைக்காரரான சார்லி ஒரு கடிகாரத்தின் மதிப்பைக் கணக்கிடுவார். முதலில் மருத்துவர்களின் ஸ்டெத்தஸ்கோப் மூலம் அதன் செயற்பாட்டைக் கூர்ந்து கேட்பார். பிறகு அதைச் சுத்தியலாலும், துளைபோடும் கருவியாலும் தாக்குவார். பின் தகரக்குவளை திறக்கப் பயனபடும் கருவியால், மூடியைத் திறநது முகர்வார். அடுத்து கடிகாரத் தயாரிப்பாளர்களின் கண்ணாடியை அணிந்து கொணடு ஆராய்வார்.

அதுவும் திருப்தியளிக்காமல், இரு சிறு குறடுகளால் அதன் உட்பகுதி முழுவதையும் வெளியே இழுப்பார். அதன் மெயின் ஸ்பிரிங் வேகமாக செயற்பட, அதில் கொஞ்சம் எண்ணெய் ஊற்றுவார்.

அவர் ஆராய்ச்சி முடிந்தபின், அந்தக் கடிகாரத்தின் பகுதிகளை, வாடிக்கையாளரின் தொப்பியில் திணித்து தோள்களை அசைத்தபடி திருப்பிக் கொடுப்பார். அதாவது அந்தக் கடிகாரம் அட்கு வைக்க மதிப்பானதல்ல!

இப்போது சார்லி தனது கலையில் வல்லவர். சில கலைஞர்கள், சில எழுத்தாளர்கள், ஓவியர்கள், திரைப்பட இயக்குநர்கள் தங்களுடைய படைப்புக்களை முதலிலேயே தீர்மானித்த பிறகுதான் அதை உருவாக்கினார்கள். அதில் மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியமே இருக்காது. ஆனால் சார்லியைப் போன்ற நடிகர்கள், அதிக அளவில் காட்சிகளை உருவாக்கி, பிறகு ஒரு வடிவத்திற்கு வர, அதை வெட்டிவிடுவர்கள்.

1917, ஜூனில் வெளியான 'த இமிக்ரெண்ட்' என்ற படத்திற்காக நாற்பதாயிரம் அடிகள் படமாக்கப்பட்டன. இதைத் தேவையான 1800 அடிகளாக குறைக்க சார்லிக்கு, தனது உதவியாளர்களின் உதவியுடன் நான்கு பகல்களும், நான்கு இரவுகளும் பிடித்தன. எதை வெட்டி எடுக்க வேண்டும் என்று முடிவு செய்ய, சார்லி ஒவ்வொரு காட்சிளையும் குறைந்தது ஐம்பது முறையாவது பார்த்தார். முடிவில் சார்லி களைத்துப்போய் அழுக்காகவும், சோர்வாகவும் காணப்பட, படம் முடிவடைந்து விட்டிருந்தது.

சமகால சமூகப்பிரச்சினைகளை மையமாகக் கொண்டு சார்லி எடுத்த சிறந்த படங்களின் வரிசையில் 'த இமிக்ரெண்ட்' முதல் படம். 1917 இல் இருந்து இரண்டாவது உலகப்போர் வரையிலான அவருடைய படங்கள் அநீதிகளை எடுத்துக்காட்டின. அதில் பல படங்கள், பார்வையாளர்களை உணர்ச்சிவசப்படச் செய்பவையாக இருந்தன.

'த இமிக்ரெண்ட்' அமெரிக்க நாட்டினுள் பிரவேசிக்கும் ஏழையின் நிலையைப் பிரதிபலித்தது. பல வழிகளில் இந்தப்படத்தைச் சார்லியின் சுயசரிதையாகவே காணலாம். அவரும் ஒரு அன்னியனாக அமெரிக்காவுக்கு வந்து, அந்த நாட்டில் இருந்த நன்மைகளையும், தீமைகளையும் கண்டறிந்தவர்.

இந்தப் படத்தில் நாடோடி, பல குணாதிசயங்கள் உடைய குடிபெயரும் மக்களுடன் கப்பலில் காணப்படுகிறான். அங்கு அவன் எட்னாவையும் அவள் தாயையும் சந்திக்கிறான். ஒரு சூதாடியால், அவர் பணம் திருடப்பட்டுவிட, கையில் காசில்லாமல் இருக்கிறார். குடிபெயருபவர்களில் பெரும்பாலோர் படும் அவதிகளின் பின்னணியில் இந்த நகைச்சுவைக் காதல் கதை செல்கிறது.

வாய்ப்புகளின் தங்கப்பூமி பற்றி கதைகளால் ஆசைப்பட்டு வரும் அவர்கள், புதிய நாட்டின் நிராகரிப்பைச் சந்திக்கவே வருகிறார்கள். படத்தில் சுதந்திரக்கன்னியின் சிலை பின்னணியில் தெரிய, சுதந்திர நாட்டிற்கு வருகை என்ற வாசகம் திரையில் தோன்றும். உடனேயே கப்பலிலிருந்து மக்கள் கூட்டத்தினைக் குடிபெயர் திணைக்கள அதிகாரிகள் கயிற்றைக் கொண்டு, மாடுகளைப்போல் அவர்களை ஓர் இடத்தில் கட்டி ஒதுக்குவார்கள்.

(அடுத்த அரங்கில் தொடரும்)

# பஞ்சாப் சீக்கியர் பேரணியில்






1704 ஆம் ஆண்டில், இந்தியாவை ஆண்ட முகலாய மன்னர்கள், தமது இஸ்லாம் மதத்திற்கு மாறுவதற்கு மறுத்த, பத்தாவது சீக்கிய குருவின் இரு இளம் புதல்வர்களையும் உயிரோடு சமாதிகட்டிக் கொன்றனர். இச சம்பவத்தை நினைவு கூறுமுகமாக ஆண்டு தோறும் பஞ்சாப்பில் சீக்கியர்கள் நடத்தும் பேரணி இது.




## திரை விமர்சனம்

இன்றுடன் முடிவடையும் 2002 இல், இதுவரையில்- இவ்வாண்டில் வெளிவந்த ஆங்கிலத் திரைப் படங்களினுள் பலரது அபிமானத்தையும் பாராட்டையும் பெற்றுள்ள திரைப்படம் "**Black Hawk Down**" என்ற இரண்டரை மணிநேரப் போர்த் திரைப்படமாகும். 1993 இல் சோமாலியாவில் யுத்த பிரபு முஹமட் பரா ஐடீட்டின் ஆதரவுப் படைகள் மீது, அமெரிக்க இராணுவம் ஒரு அதிரடித்தாக்குதல் நடாத்தச் சென்று, முயற்சியில் தோல்வி கண்டு, திரும்பிய உண்மைச் சம்பவத்தையே படமாக்கியுள்ளார் இயக்குநர் ரிட்லே ஸ்கொட். "க்ளேடியேட்டர்" என்ற பிரமாண்டமான படத்தைத் தந்து பிரபலமானவர் இயக்குநர் ஸ்கொட். இவரது இயக்கத்தில் 'பிளக் ஹோக் டவுன்' என்ற இத்திரைப்படம் மிகச் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

திரைப்படத்தின் ஆரம்பத்தில் கிரேக்க தத்துவஞானி பிளேட்டோவின், "போரில் எஞ்சுவது மரணம் மட்டுமே" என்ற மகுட வாக்கியத்தைத் தந்துவிட்டே கதையை ஆரம்பிக்கிறார் இயக்குநர்.

சோமாலியாவில் ஆதிக்கம் மிக்கவராக இருந்த ஐடீட்டின் இரு தளபதிகளை அதிரடி மூலம் சிறைப்பிடிப்பதற்காக 1993 ஒக்டோபர் மூன்றாம் திகதி 140 அமெரிக்க '**Rangers**' அதிரடிப் படையினர், தலைநகர் மொகடிசுவுக்கு பல ஹெலிகொப்டர்களில் இரகசியமாக அனுப்பப்படுகின்றனர். பஹரா சந்தைப்பகுதி அதிரடியின் இலக்கு. தாக்குதல் நடாத்தி நடவடிக்கையை முடிக்க, முப்பது நிமிடநேரமே கொடுக்கப்பட்டிருந்தது. வந்திறங்கும் அமெரிக்க படைகளுக்கு - எதிர்பாராது ஐடீட் படையினர் திடீர் எனத் தொடுக்கும் தாக்குதல் அதிரடி முயற்சியைப் பெரும் போர் நிலையாக மாற்றுகிறது. ஒருநாள் முழுவதுமாக நீளும் இத்தாக்குதலில், அமெரிக்க அதிரடிப்படை சந்திக்கும் இழப்பு, வெளிநாடு ஒன்றில் - வியட்நாம் போரின் பின்னர்- அமெரிக்கா சந்திக்கும் பேரழிவாக மாறுகிறது. விமானப் படையின் தாக்குதல் ஹெலிகளான **Black Hawk** ரக ஹெலிகப்டர்கள் இரண்டு சுட்டுவீழ்த்தப்படுகின்றன- இதுவே இத்திரைப்படத்தின் பெயருங்கூட- விமானிகள் சிறைபிடிக்கப்படுகின் றனர், கொல்லப்படுகின்றனர். இறுதியில் ஐ.நாவின் தலையீட்டில் சுற்றி வளைக்கப்பட்டிருந்த சில அமெரிக்கப் படைகள், ஐ.நா பாதுகாப்பு வலயத்துக்கு துப்பாக்கிகளுடன் தலைதெறிக்க ஓடுகின்றனர். (படம் முழுமைக்கும் துப்பாக்கிகளின் வேட்டோலியே அதிரவைக்கின்றது)

ஒரு உண்மைச் சம்பவத்தை பாரபட்சமின்றி, ஒழிவுமறைவு இன்றி அமெரிக்க இயக்குநர் ஸ்கொட் தந்திருப்பது பாராட்டப்பட வேண்டியது. கைது செய்யப்படும் ஹெலி விமானியிடம், ஐடீட்டின் தளபதி - "எங்களை அடித்து உங்கள் ஜனநாயகத்தை எங்களுக்குத் திணிக்கப் பார்க்காதீர்கள்" என்று எச்சரிப்பதிலும் சரி, திரைப்படத்தின் இறுதிக் காட்சியில் இறந்த தன் சகாவின் உடலருகே அமர்ந்து அமெரிக்க வீரர் ஒருவர், "மற்றவர்களின் அரசியல் போரிற்குள் நாம் ஏன் தேவையின்றித் தலையிட்டு அடிவாங்க வேண்டும். இப்போது எவருமே இங்கு வீரர்களாக (**Heros**) இல்லை என்று அமைதியாகக் கண்ணீர் வடிக்கும் காட்சியிலும் சரி- இத்திரைப்படத்தின் திரைக்கதை, எழுத்தாளர் கென்நோளன் வல்லரசுகளின் அடாவடித்தனத்தை மறைவு ஏதுமின்றித் தெளிவாக வெளிக்கொண்டுவருகிறார்.

திரைப்படத்தை மெருகூட்டுவது ஒளிப்பதிவாளர் ஸ்லாவோமிர் இட்ஸியக்கின் கமராவின் இயக்கு திறனே. திரைப்படம் ஆரம்பித்து அரைமணி நேரத்தில் ஆரம்பிக்கும் போர் காட்சிகள், இரு மணிநேரமாக சலிப்புத் தட்டாமல் செல்வதற்கு இவரின் ஒளிப்பதிவே முக்கியமாக அமைந்திருக்கின்றது. போரின் அழிவுக்காட்சிகள், படையினரின் உடற்காயங்கள், அவர்களது வேதனைகள், அழுகைகள் என்பன தத்ரூபமாகப் படமாக்கப்பட்டுள்ளது. இறுதியில் பின்வாங்கி ஓடும் ஒரு சில அமெரிக்கப் படையினர் முன்பாகச் சோமாலியப் பொதுமக்கள் கேலியாகக் கூச்சலிடுவதையும், படையினருக்கு முன்பாக சோமாலியச் சிறுவர்கள் அவர்களைக் கேலிசெய்தபடி ஓடுவதையும் இயக்குநர் ஸ்கொட் எடுத்துக்காட்டுவது யதார்த்தத்தை அப்படியே எம்மீது தூக்கி நிறுத்துகின்றது. தாக்குதலின் ஒவ்வொரு கட்டத்திலும் அது நடைபெறும் நேரமும் திரையில் காட்டப்படுவது நல்லதொரு அம்சமாகத் தெரிகிறது. ஏனெனில், இது ஒரு உண்மை வரலாறு ஆகும்.


மொத்தத்தில் செப்ரெம்பர் 11 இன் பின்னர், தற்போதைய உலக நிலவரத்தில் - ஈராக் மீது அமெரிக்காவின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில் - இத்திரைப்படம் சில செய்திகளை எமக்குப் பகிரங்கமாகச் சொல்வதையே அவதானிக்க முடிகிறது. போர் திரைப்படப் பிரியர்களை வெகுவாகக் கவரக்கூடிய இத்திரைப்படம், விரசக்காட்சிகள் அற்ற தரமான படைப்பு எனத் துணிந்து கூறலாம்.

-துஷி

# உறவை உறுதிப்படுத்த பாராட்டுங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

கலந்துரையாடல் என்பது சண்டை பிடிப்பதல்ல. இருவரும் எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பாவிக்



கின்றனர்? முன்பு கூறியதைப் போன்று ஒன்றியத் தொடர்பா? ஒன்றாத் தொடர்பா? நேரம் என்ன என்று கேட்கும்போது மற்றவர் 10 மணி என்கிறாரா? அல்லது- நீங்கள் பாருங்கள், எனக்கு நேரமில்லை என்கிறாரா.

நாம் நேரம் ஒதுக்கிக் கலந்துரையாடும்போது ஒன்றிய தொடர்பு வார்த்தைகளையே பாவிக்க வேண்டும்.

கணவன் மனைவி இருவரும் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள உண்மையுடன் வாழப்பழக வேண்டுமென முன்பும் நோக்கினோம். ஒருவர் மற்றவரைச் சந்தேகத்தோடு பார்க்கத் தொடங்கினால், உறவு மேலும் முறியலாம். குடும்பவாழ்வில் ஆரம்பத்திலிருந்தே சந்தேகிக்கத் தொடங்கினால் பாதுகாப்புப் பலவீனத்தால் நரம்புத் தளர்ச்சி நோய்க்கு ஆளாகலாம்.

கணவன் மனைவிக்கிடையில் உறவை வளர்த்துக் கொள்ள ஒருவர் மற்றவரைப் பாராட்டவேண்டும். பாராட்டைப் பெறுபவர் பாராட்டுபவரை விரும்புவார். பாராட்டுதலைப் பெறும் மனைவி, தனது கணவனை மனதால் நெருங்குகிறாள். அதே போன்றுதான் கணவனும் பாராட்டுதலைப் பெற்றால், தனது மனைவியை விரும்புவான். பாராட்டைப் பெறும் பொழுதுதான் செய்யும் நல்ல செயல்களில் தைரியம் பிறக்கிறது. பாராட்டு வதால் தொடர்பு வளர்கிறது.

ஓர் கருத்தரங்கின் மூலம் பாராட்டுதலின் முக்கியதுவத் தைப் பற்றி அறிந்த நபர் ஒருவர் மாலையில் வீட்டுக்குச் சென்றார். வீட்டில் அவரது மனைவி 'இரு சறமும் அழுக்காக இருந்ததால் துவைத்து வைத்துள்ளேன்" என்றாள். உடனே மனைவியைப் பாராட்டவேண்டும் என்ற அறிவுரை அவரது ஞாபகத்துக்கு வரவே "உங்களுக்கு நன்றி" என்று மனைவிக்குக் கூறினார். மனைவி ஆச்சரியப்பட்டவாறு "ஏன் எனக்கு நன்றி என்று கூறினீர்கள்?" என்று கணவனிடம் கேட்டாள். "உங்களது நல்ல செயலைக் கண்டதால் நன்றி என்று கூறினேன்" என்று கணவன் கூறினான். "நாங்கள் திருமணம் முடித்துப் 14 வருடங்கள் ஆகின்றன. இதற்கு முன் ஒருநாள் கூட நன்றி என எனக்குக் கூறவில்லை. இன்றுதான் முதன் முதலாக நன்றி என்று எனக்குக் கூறியுள்ளீர்கள்" என்றாள்.

நீண்ட காலமாக வாழ்ந்துவரும் குடும்பங்களில் பாராட்டுதல் மிகவும் அதிகமாக இருக்குமென எம்மால் நினைக்க முடியுமா?

ஒருவரது உணர்வை அறிந்தால் மட்டும்போதாது. அவரது செயற்பாட்டின் பின்னணியையும் அறிதல் வேண்டும். செயற்பாட்டைப் பிரித்துப் பார்க்காது அச்செயற்பாட்டுக்கு பொருத்தமான சூழலின் பின்னணி என்ன என்பதை நோக்க வேண்டும். பின்னணியை அறிந்தால் அச்செயற்பாட்டின் காரணத்தைப் புரிந்து விடலாம். ஒரு காரணமுமில்லாத மனித செயற்பாடு இல்லை எனலாம். ஒரு தம்பதியினர் தமது திருமணத்தின் பின், தனி வீட்டில் குடித்தனம் நடத்தி வந்தனர். ஒருநாள் காலையில் கணவன் தனது உடுப்புகளை எடுத்துப் போட்டுக்கொண்டு, வேலைக்குப் போக வெளிக்கிடும்பொழுது, மனைவியிடம் கொடுத்த பணம் எல்லாம் தனது உடுப்புகளின் இடையே வைக்கப் பட்டிருந்ததைக் கண்டார். மனைவியைக் கூப்பிட்டு இனிமேல் எனது உடுப்புக்குள் பணத்தைச் செருகி வைக்க வேண்டாம் என்று கூறினார். மறுநாள் பார்த்த போது அப்பணம் திரும்பவும் கணவனின் உடுப்புக்கடியில் வைக்கப்பட்டிருந்தது: கணவனுக்குக் கோபம் வந்துவிட்டது. மனைவியை ஏசிவிட்டார். இனிமேல் இப்படிச் செய்ய வேண்டாம் என்று கூறினார். மறுநாள் வேலைக்குப் போகும்போது திரும்பவும் பணம் வைக் கப்பட்டிருப்பதைக் கண்டு கணவன் மனைவியுடன் கோபிக்காது மனைவியுடன் கலந்துரையாடினார். அப் பொழுது அவருக்குப் பல உண்மைகள் புரிய வந்தன. மனைவி சிறு பெண்ணாக இருக்கும்போது தகப்பன் இறந்துவிட்டார். பாதுகாப்பைப் பற்றிய பயம் அவளுக்குள் இருந்தது. கணவன் வீட்டில் இல்லாத நேரம் கணவன் உடைக்குள் பணத்தை வைப்பது பாதுகாப்பானது என மனைவி உணர்ந்தாள் என்பது புரியவந்தது.

(அடுத்த வாரம் தொடரும்) -ஜே. யோகராஜா

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்.

- திருக்குறள்

# நமது நோக்கு

## நல்லெண்ணத்திற்கு விரோதம்

**அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வருகின்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின் படி- பல்வேறு மட்டங்களிலும் உருவாகக்கூடிய பிரச்சினைகளை அந்தந்த மட்டங்களில் தீர்க்கக்கூடியதாக, ஆராயக் கூடியதாக வழிவகையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.**

**இத்தகைய அடிப்படையிலேயேதான் - பாதுகாப்பு விவகாரங்களைக் கையாளுவதற்கான உபகுழு அமைக்கப்பட்டு, அதன் கூட்டங்களும் நடைபெற்றன.**

**இந்த உபகுழுக் கூட்டங்களில் - கிழக்குப் பகுதியில், குறிப்பாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்கான கூட்டம் தவிர, ஏனைய மாவட்ட உபகுழுக் கூட்டங்களில்- திருப்திகரமான, முன்னேற்றகரமான தீர்வுகள் எதுவும் எட்டப்படாத நிலை காணப்பட்டது.**

**இச்சந்திப்புக்களில் பங்கேற்ற இராணுவத் தரப்பின் தளர்வற்ற போக்குகளும், விட்டுக் கொடுப்பற்ற தன்மையும்- இச்சந்திப்புக்களினூடாக எவ்விதமான இணக்கப்பாட்டினையும் எட்டுவதற்குத் தடையாக அமைந்ததுடன், மக்களுக்கும் சமூக வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க இயலாதவாறு 'நிபந்தனைகளும்' படைத்தரப்பினால் முன்வைக்கப்பட்டன.**

**இதன்மூலம் - சமாதானப் பேச்சுக்களுக்கான உறுதியான அடித்தளமொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளுக்கும் இராணுவத் தரப்பிலிருந்து முரண்பட்ட நிலைமையே காணப்பட்டது.**

**இவ்வாறான சூழலில் - படைத்தரப்புடன் பேச்சுக்களை நடாத்தி - இணக்கத்தை ஏற்படுத்தலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் சிதைவடைந்த நிலையிலேயே, விடுதலைப் புலிகள்- இனிமேல் பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தில் பங்கேற்பதில்லை என்ற முடிவுக்கு வந்தனர்.**

**இறுதியாக முகமாலையில் நடந்த கூட்டத்தின் முடிவில்- விடுதலைப் புலிகளின் தரப்புக்கான குழுத்தலைவரும், கிழக்குப் பிராந்தியத் தளபதியுமான கேணல் கருணா - இந்தத் தீர்மானத்தினை அறிவித்தார்.**

**இராணுவத் தரப்பின் கடும்போக்கு நிலைப்பாட்டினால்- இனிமேலும் பாதுகாப்பு உபகுழுவைக் கூட்டி ஆராய்வது அர்த்தமற்றது என்ற நிலைப்பாட்டுக்கு விடுதலைப் புலிகள் வந்ததுடன் - இறுதியாக ஒரு வாய்ப்பினையும் படைத்தரப்புக்கு வழங்கியிருந்தனர்.**

**குறிப்பிட்ட கால அவகாசத்தினுள் - இராணுவம் தானாகவே - மக்களை மீள்குடியேற்றுவதற்கான பிரதேசங்களைச் சொல்லும் திட்ட வரைபொன்றை முன்வைக்க வேண்டுமெனவும், தவறின் முகமாலைச் சந்திப்பே இறுதியானது எனவும், விடுதலைப் புலிகள் நியாயபூர்வமாக தமது நிலையை வலியுறுத்தினர்.**

**ஆனால் - இந்த இறுதிச் சந்தர்ப்பத்தையும் இராணுவம் கோட்டைவிட்டது. மீள்குடியமர்வுக்கான திட்டவரைபு என்ற பெயரில் - பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தின்போதான கடும்போக்கினை முழுமையாகப் பிரதிபலிப்பதாகவே திட்ட வரைபு அமைந்திருந்தது.**

**அதனைத் திட்டவரைபு என்று சொல்வதை விட - நிபந்தனை வரைபு என்று சொல்வதே பொருத்தமாயிருக்கும் என்றாற்போல - வரிக்கொரு நிபந்தனையாக இராணுவத் தரப்பின் பதில் வெளியிடப்பட்டது.**

**இத்தகையதொரு நிலையிலேயே - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - படையதிகாரிகளுடனான சந்திப்புக்களினூடாக பலன் கிட்டாது எனத் தெளிவாகத் தெரிந்துவிட்டநிலையில் - அரசாங்கத்துடன் இது விடயமாக நேரடியாகப் பேசிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.**

**அடுத்த கட்ட சமாதானப் பேச்சுக்களில் மீள்குடியமர்வு சம்பந்தமாகவே முக்கியமாக ஆராயப்படும் என்றும், லட்சக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்ப முடியாமல் தொடர்ந்தும் அகதி வாழ்வு வாழும் போது - ஏனைய பிரச்சினைகள் இரண்டாம் பட்சமே என்றும் கருத்துக் கூறியிருக்கிறார் அவர்.**

**கடந்த காலத்தில் கண்மூடித்தனமான, யுத்த நெறிமுறைகளைக் கடந்த பாதையில் போரினை முன்னெடுத்த படைத்தரப்புடன் - நல்லெண்ண உறவை வளர்த்து, இணக்கமான சூழலொன்றை உருவாக்க விடுதலைப் புலிகள் நீட்டிய கரத்தை உதறித்தள்ளுமாற்போல இராணுவத்தரப்பின் நடவடிக்கைகள் அமைந்துவிட்ட நிலையில் -**

**அரசாங்கத்துடனேயே இனி மீள்குடியமர்வு பற்றியும், அதற்குத் தடையாகவுள்ள பாதுகாப்பு வலய நீக்கம் தொடர்பாகவும் பேசிக்கொள்வதென விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள தீர்மானம் - தவிர்க்க முடியாததாகவே வெளிவந்துள்ளது.**

**அதேவேளை - போரின் அவலங்களை மக்கள் இன்னமும் சுமந்து கொண்டிருக்கையில் - இந்தச் சுமைகளை நீக்காமல் - வேறு விடயங்களில் கவனம் செலுத்த முடியாது என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளமையும், மக்களின் எண்ணங்களின் அடிப்படையில், அவர்களது உடனடித் தேவைகளின் தளத்தில் மிகப் பொருத்தமான அறிவிப்பேயாகும் என்பதில் மாற்றுக் கருத்தும் இருக்கமுடியாது.**

# உலகோடு ஒத்திசையும் புலிகளின் சாமர்த்தியம்

**நேற்றைய தொடர்ச்சி....**

சமீபகாலமாக வரும் உளவு அறிக்கைகளில் இருந்து ஒரு விஷயம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. அது, கடந்த வருடம் அமெரிக்கப் படைகள் பெருமளவில் நுழைந்தபோது, சிதறி ஓடிய அல்கெய்டா அமைப்பினர் ஆப்கானிஸ்தானுக்கு உள்ளேயும் வெளியேயும், சிறு சிறு குழுக்களாக மீண்டும் சேர்ந்து கொள்கிறார்கள் என்பதே.

இந்தச் சிறுசிறு குழுக்கள் எல்லாம் இனிவரும் காலத்தில் எப்போது ஒன்றாகச் சேர்ந்து பெரியபடையாக மாறப்போகின்றது என்பதுதான் யாருக்கும் தெரியவில்லை.

ஆனால், இதற்காகப் பல மத்திய கிழக்கு நாடுகளில் பணம் சேர்க்கப்படுகிறது என்பது பல சமயங்களில் ஊர்ஜிதமாயிருக்கிறது.

மொத்தத்தில் ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவுக்கு இருக்கும் ஆபத்து நீறுபூத்த நெருப்புப்போல எப்போது கொளுந்துவிட்டு எரியும் என்று சொல்லமுடியாத நிலையில் இருக்கிறது.

அல்கெய்டாவினருக்கு மறைவிடம் கொடுக்கும் வகையில் பாகிஸ்தானும், ஆயுதம் சேகரிக்கப் பண உதவி செய்யும் வேறு சில மத்தியகிழக்கு நாடுகளும்- மறைமுகமாகச் செய்யும் உதவிகளை 100 சதவீதம் நிறுத்தாத பட்சத்தில், அமெரிக்காவுக்கு ஆப்கானிஸ்தானில் சிக்கல் எப்போதுமே இருக்கப்போகிறது.

கிட்டத்தட்ட நிரந்தர ஆபத்து என்றநிலை.

**தாய்லாந்து -**

இங்குள்ள நிலைமை வேறுவிதமானது. தாய்லாந்தில் நேரடியாக அல்லது வெளிப்படையான அமெரிக்க எதிர்ப்பு இல்லை. ஆனாலும் மறைமுகமாக இருக்கிறது. அதேநேரத்தில் வெளிப்படையாக பின்லேடனுக்கு ஆதரவு இருக்கிறது, அதை யாரும் தடுப்பதும் இல்லை.

அதற்குக் காரணம் தாய்லாந்தின் பொருளாதாரம் உல்லாசப் பயணத்துறையைப் பெரிதும் சார்ந்திருப்பதால் அங்கு உல்லாசப் பயணிகள் என்ற போர்வையில், யாரும் வந்து போகலாம் என்ற நிலை இருப்பது ஒன்று.




**ஆப்கானிஸ்தானை தனது கண்காணிப்பிலுள்ள தளமாக்க அமெரிக்கா என்றும் மிக்க ஆர்வமுடனேயே இருக்கும்.**

இரண்டாவது காரணம், தாய்லாந்தின் கடற்கரையைச் சுற்றி இயங்கிவரும் ஆயுதக் கடத்தல்களும், போதை மருந்துக் கடத்தல்களும். உலகிலுள்ள அநேகமான எல்லாத் தீவிரவாத அமைப்புக்களுக்கும் தாய்லாந்தில் ஏதோ ஒருதொடர்பு இருக்கின்றது.

அந்தத் தொடர்பு பண விவகாரமாகவும் இருக்கலாம், ஆயுத விநியோகமாகவும் இருக்கலாம, அல்லது தாக்குதல் திட்டமிடும் மையமாகவும் இருக்கலாம். ஆசியாவில் நிரந்தரமாக வசிக்கும் அமெரிக்கர்களின் எண்ணிக்கையில் சுமார் எழுபது சதவீதமானவர்கள் வசிப்பது தாய்லாந்தில்தான்.

இதில் பலர் சிறிய சிறிய முகவர்கள் என்பது, தாய்லாந்தில் உள்ள நைற் மார்க்கட் சிறு வியாபாரிகளுக்குக்கூட தெரிந்த உண்மை. இப்படியான ஒரு கலந்து கட்டிய ரகமான மக்கள் வாழும் நாட்டில் சிறுபான்மை இனமாக வசிப்பவர்கள் முஸ்லிம்கள்.

இதுவே, பல முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களை 1980 களின் இறுதியில் தாய்லாந்தை நோக்கி இழுத்து வந்தது. இப்போது சில மிகப்பெரிய முஸ்லிம் தீவிரவாத இயக்கங்களின் பண விநியோக, ஆயுத விநியோக மையம் தாய்லாந்துதான்.


அதுவும் தாய்லாந்தின் தெற்குப் பகுதி இதற்கு மற்றுமோர் காரணம். தாய்லாந்தின் தெற்கு நகரங்கள் மலேசியாவுடன் கரையால் இணைக்கப்பட்டிருக்கும் எல்லை நகரஙகள். மலேசியா, முஸ்லிம் அமைப்புக்களுக்குப் பாதுகாப்பான நாடுகளில் ஒன்று.

தாய்லாந்தில் இருந்து இயங்கும் தீவிர வாத இயக்கங்களின் பெரிய சதவீதம், இப்போது அமெரிக்காவுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கும் அல்கெய்டா அல்ல. கொஞ்சம் நுணுக்கமாகப் பார்த்தால் அல்கெய்டா பெரிய அளவில் தாய்லாந்தை இதுவரை உபயோகித்ததில்லை. ஆனால், மற்றுமொரு முஸ்லிம் தீவிரவாத இயக்கமான ஜமா இஸ்லாமியாவின் மிகப் பெரிய பணச்சுழற்சி இடம்பெறுவது தாய்லாந்தில்தான்.

ஜமா இஸ்லாமியாவின் முக்கிய தலைவர்கள் அடிக்கடி கூடிப் பேசித் திட்டமிடும் இடம், தாய்லாந்தின் தெற்குப்புற உல்லாச நகரமான பொக்கற் என்று சொல்லப்படுகின்றது.

இந்த வருட ஜனவரி மாதத்தில் ஜமா இஸ்லாமியாவின் பிராந்தியத்தலைவர்கள் எல்லோரும் கலந்து கொண்ட இரகசியக் கூட்டமொன்று, பொக்கற் நகரத்தின் வெளியே அமைந்த விடுதி ஒன்றில் நடைபெற்றது என்ற தகவலை சி.ஐ.ஏ. வைத்துள்ளது.

அந்த இரகசியக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவும்,



**அமெரிக்கா என்னதான் மேலாதிக்கம் செலுத்தினாலும் இஸ்லாமிய மதவாதம் அதற்கு எதிரான வலுமிக்க சக்தியே.**

போடப்பட்ட திட்டமுந்தான் சமீபத்தில் இந்தோனேசியாவின் பாலி நகரில் வெடிக்கப்பட்ட வெடிகுண்டு விபத்து என்பதை முஸ்லிம் அமைப்புக்களோடு தொடர்புடையவர்கள் ஊர்ஜிதம் செய்கிறார்கள்.

இன்றைய நிலையில் அமெரிக்காவிற்கு தாய்லாந்தில் எதிர்பார்க்கப்படும் ஆபத்துக்கள், நேரடியாக அமெரிக்க இராணுவம் தாக்கப்படுபவை போன்றவையல்ல, மறைமுகமானவை. ஆனால், அவை பெரிய பாதிப்பைப் பொருளாதார ரீதியில் கொடுக்கக் கூடியவை. அந்தப் பாதிப்பு அமெரிக்காவிற்கு மாத்திரமல்ல தாய்லாந்திற்குக் கூட பொருளாதாரரீதியில் ஏற்படமுடியும்.

இவ்வளவு காலமும் தாய்லாந்தை தமது தளமாக முஸ்லிம் அமைப்புக்கள் பயன்படுத்தி வந்த விஷயத்தை தாய்லாந்து அரசு பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை

காரணம், அதனால் தாய்லாந்துக்கு எந்த விதமான பாதிப்பும் நேரடியாக இருக்கவில்லை. மேலும், தாய்லாந்துக்கு உலக அளவில் இருக்கும் போர்ச்சிக்கல் இல்லாத, உல்லாசப் பயணத்திற்கு உகந்த ஆசியநாடு எனபதுமாகும். உல்லாசப் பயணத்துறையில் வரும் அந்நிய செலாவணியில்தான் தாய்லாந்தின் பொருளாதாரமே இயங்குகின்றது.

இதனால் முஸ்லிம் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களைத் தாய்லாந்து தேடிப் பிடிக்கத் தொடங்கினால், தங்கள் நாட்டில் தீவிரவாத அமைப்பினரின் நடமாட்டம் பெரிய அளவில் இருப்பதாக தாய்லாந்தே ஒப்புக்கொள்வது போலாகிவிடும்.

அதன் காரணமாக உல்லாசப் பயணிகளின் வருகை குறைந்து போகும். இந்தக் காரணத்திற்காகத்தான்- சி.ஐ.ஏ., தாய்லாந்தில் இயங்கும் தீவிரவாத அமைப்புக்கள் பற்றி தாய்லாந்து உளவுத்துறைக்குத் தகவலுக்கு மேல் தகவல் கொடுத்தும் தாய்லாந்து கண்டுகொள்ளாமல் இருந்தது.

இப்போது அமெரிக்கா இதை வேறுவிதமாகக் கையாளுகின்றது. அதன் பிரகாரம் தாய்லாந்து அரசிற்கு நெருககடி உருவாக்கப்படுகின்றது.

சமீப காலமாக சர்வதேச ஊடகங்களில் தாய்லாந்தில் தீவிரவாதிகளின் நடமாட்டம் என்பது மிகப் பெரிதாகப் பிரசாரம் செய்யப்படுகின்றது. அமெரிக்கா, உத்தியோகபூர்வமாக தாய்லாந்து செல்லும் உல்லாசப் பயணிகளுக்கு தாய்லாந்தில் முக்கிய நகரங்களில் ஆபத்து ஏற்படலாம் என்று 'பயண முன்னெச்சரிக்கை ஆலோசனைகளைக்' கொடுக்கின்றது.

## கனடாவிலிருந்து ரிஷி

ஒரு சில ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவைப் பின்பற்றி தத்தமது நாட்டு மக்களுக்கு அப்படியான 'பயண முன்னெச்சரிக்கை ஆலோசனைகளைக்' கடந்த மூன்று நான்கு மாதங்களில் வழங்கியிருக்கின்றன.

தாய்லாந்து அரசு தங்கள் நகரங்களில் தீவிரவாதிகளின் தாக்குதல் நடக்கலாம் என்ற சாத்தியத்தை மறுத்து வரும் அதேநேரத்தில், சமீபத்தில் தாய்லாந்துக்கு அருகே உள்ள இந்தோனேசியாவின் பாலி நகரில் நடந்த குண்டுவெடிப்பும் அதன் தாக்குதலுக்கான திட்டமிடலும் தாய்லாந்தில் வைத்துத்தான் நடைபெற்றது என்று சர்வதேச ஊடகங்கள் பெரிதாகப் பிரசாரம் செய்வதுமாகச் சேர்ந்து, உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையை நன்றாகவே குறைத்து விட்டன.

கடந்த மாதத்தில் மாத்திரம் பொக்கற் நகரிற்கு வந்த பயணிகளின் எண்ணிக்கை வழக்கத்தைவிட 15 சதவீதம் குறைவு என்பதை தாய்லாந்து அரசாங்கம் ஒப்புககொள்கிறது.

அடுத்து வரும் காலங்களில், தாய்லாந்தின் பெருநகரமொன்றில் தீவிரவாதிகளின் குண்டுவெடிப்பு அல்லது கலவரம் உண்மையிலேயே நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சிலவேளைகளில் அப்படியான ஒரு அபாயம் நடைபெற்றால் அது சி.ஐ.ஏ.யால் 'செற்அப்' செய்யப்பட்ட ஒரு தாக்குதலாகக்கூட இருக்கலாம் என்பதற்கும் சந்தர்ப்பம் உண்டு.

சுருக்கமாகச் சொன்னால், அமெரிக்காவுக்கும் அமெரிக்கர்களுக்கும் எதிராக அமெரிக்காவுக்கு வெளியே வைத்து ஒரு தாக்குதல் திட்டமிடப்பட வேண்டும் என்றாலோ, அதற்கான படை ஏற்பாடுகளும், ஆயுத ஏற்பாடுகளும் செய்யவேண்டும் என்றாலோ, அமெரிக்க எதிர்ப்புத் தீவிரவாதிகளுக்கு மிக அருமையான இடம் தாய்லாந்தே.

(நாளை தொடரும்)

# குடியேற்றக்காரர்கள் உருவாக்கிய அமெரிக்கா என்ற தேசத்தின் கதை!

இவவாரத்தின் கட்டுரைத் தொடரில் இருந்து ஐக்கிய அமெரிக்காவினது சமஷ்டி மாதிரியை பார்க்கவுள்ளோம். இந்த வகையில் ஐக்கிய அமெரிக்காவிற்கு முதன்முதலில் ஒரு சமஷ்டி முறையை உருவாக்க வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தங்கள் ஏன் உருவாகின என்பதனை முதலில் பார்ப்போம்.

யபோது - இன்னுமொரு ஐரோப்பிய நாடான ஸ்பெயினும் கடல் வாணிபத்தில் செழித்திருந்தது. இதனால் ஸ்பெயினுக்கும் பிரித்தானியாவிற்கும் இடையிலான கடல் வாணிபப் போட்டி - போரில் முடிவடைந்தது. அந்தப் போரில், ஸ்பெயினை பிரித்தானியா வெற்றி கொண்டது.

கடல் கடந்து வந்தோரே அமெரிக்காவை உருவாக்கினர்



வட அமெரிக்கக் கண்டத்திலே - இன்றைய ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் - பதினேழாம் நூற்றாண்டுக்கு முன்பு செவ்விந்தியர்களே வாழ்ந்து வந்தனர்.

அவர்கள் தங்களுக்குரிய வாழ்க்கை மாதிரிகளுடனும், நடத்தைக் கோலங்களுடனும் வாழ்ந்த போதும், வடஅமெரிக்கக் கண்டத்தின் பரந்த புவியியல் விஸ்தீரணத்திற்கு ஏற்ப செறிவாக வாழவில்லை. மாறாக, தனித்தனி குழுமங்களாகவே வாழ்ந்து வந்தனர்.

குறிப்பாக 1605ஆம் ஆண்டுக்கு முன் வடஅமெரிக்கக் கண்டத்தில் எநதவொரு அங்கிலோ சக்சன் இனத்தவரும் வாழவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று அமெரிக்காவில் உள்ள ஆஙகிலேயர்கள் பல்வேறு நாடுகளில இருந்தும் குடியேறியவர்களாவர். இவர்களில் - பெரும்பான்மையானவர்கள் பிரித்தானியாவில் இருந்து- 1603ஆம் ஆண்டு தொடக்கம் - காலத்திற்கு காலம் அமெரிக்காவில் குடியேறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில், பிரித்தானியாவின சமூகப் பின்புலத்தினை அக்கால கட்டத்தில் பார்ப்போமானால் - முதலாம் ஜேம்ஸ் மன்னன் முடிசூடிக் கொண்டபோது - பிரித்தானியா, எவ்வித குடியேற்றங்களையும் கொண்டிராத தனித்தவொரு அரசாக மட்டுமே இருந்தது.

ஆனால் - கீழைத்தேய நாடுகளுடன் வணிகத்தொடர்புகளைக் பேணவும் வணிகத்தில் ஈடுபடவும் அங்கு 'கிழக்கிந்தியக் கம்பனி' உருவாக்கப்பட்டிருந்தது. முதலாம் ஜேம்ஸ் மன்னன் முடிசூடிக் கொண்டதும், கம்பனியினது வளாச்சிக்குப் புதூக்கம் கிடைத்தது எனலாம். அந்தவகையில் பிரித்தானியாவின் குடியேற்றவாதம் அதாவது, பிரித்தானியா ஏனைய புவியியற் பரப்புக்களையும் நாடுகளையும், மக்களையும் தனது ஆட்சிக்குள் கொண்டுவந்த செயற்பாடு அப்போது ஆரம்பிக்கப்படாமல் இருந்தது.

ஆனால, முதலாம் ஜேம்ஸ மன்னன் முடிசூடிக் கொண்ட நாட்களில கிழக்கிந்தியக் கம்பனியும் இந்தியாவிற்கான பயணத்தினை நிறைவு செய்து வெற்றியுடன் மீண்டு வந்தது. இதுவே, பிரித்தானியாவின் கடல் வாணிபத்திற்கும், பின்னர் குடியேற்றவாதத்திற்கும் கால்கோளிட்டது எனலாம்.

### அமெரிக்காவில் குடியேற்றத்திற்கான சமூகப்பின்புலம்.

கிழக்கிந்தியக் கம்பனியின் உருவாக்கமும் அதன் கடல் வாணிபமும் - பிரித்தானியாவில் செல்வச் செழிப்பைத் தோற்றுவித்தது. பிரித்தானியாவின் கிழக்கிந்தியக்கம்பனி கடல் வாணிபத்தில் இறங்கி

அதேவேளை - பிரித்தானியாவில் மன்னனுக்கும் கத்தோலிக்க மதவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு - அந்நாட்டு மக்களைப் பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்கியது. இந்த வகையில்- ஒருபுறம் செல்வச்செழிப்பும், மறுபுறம் உள்நாட்டுக் குழப்பமுமாக இந்த இரண்டு காரணிகளும் பிரிததானிய மக்களை நாட்டை விட்டு வெளியேறத் தூண்டின.

கிழக்கிந்தியக் கம்பனியினது கடற்படைத்தளபதியாகிய கிறிஸ்தோப்பர் நியூபோட் (Christopher Newport) முதன்முதலாக - 100 பிரித்தானியர்களைக் கொண்டு சென்று, 1605 ஆம் ஆண்டு 'வேர்ஜீனியா' என்ற அமெரிக்காவின்

## சுயநிர்ணயம் - ஒருபார்வை
## பகுதி - 14

கிழக்குக் கரையோரத்தில் குடியேற்றினார். இதுவே முதற்தடவையாக பிரித்தானியர் அமெரிக்காவில் குடியேறியமை எனலாம். குடியேறிய அமெரிக்கர்கள் 'ஜேம்ஸ் ரவுண்' (James Town) என்ற பெயரில் தமது குடியிருப்பை உருவாக்கி அங்கு வாழத்தொடங்கினர்.

இவ்வாறு வேர்ஜீனியாவில் குடியேறிய மக்கள் பிரித்தானியாவுடன் வணிகத்தொடர்பைப் பேணிய அதேவேளை, வேர்ஜீனியாவில் செல்வச் செழிப்பும் இத்தொடர்பால் பாரியளவில் முன்னேற்றமடைந்தது. இதனால் - பிரித்தானியர்கள் மேலும் மேலும் அமெரிக்காவில் குடியேற விருப்பங்கொண்டனர். அமெரிக்காவின் பல பாகங்களிலும் பிரித்தானியர்கள் குடியேறத் தொடங்கினர்.

இது இவ்வாறு இருக்க - வேர்ஜீனியா ஒரு சில ஆண்டுகளுக்குள் தன்னிறைவான குடியேற்றமாக மாறியது. காலத்தொடர்ச்சியில் ஒரு செல்வந்தக் குடியேற்றமாகவும் அது பரிணமித்தது. 1919 ஆம் ஆண்டு வேர்ஜீனிய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபை ஜேம்ஸரவுணில் உருவாகியது. இதுதான் பிரித்தானியாவில் இருந்து அமெரிக்கா பிரிந்து போவதற்கான முதற்படியை எடுத்துக் கொடுத்தது எனலாம். வேர்ஜீனிய மக்கள் - தமக்குரிய சட்ட சபையை உருவாக்குவதற்கு அடிப்படையாக இருந்த காரணம் - பிரித்தானியா, 1624 ஆம ஆண்டில் இருந்து வேர்ஜீனிய மக்கள் மீது தாங்கமுடியாத வரிச்சுமையை விதித்துக் கொண்டமையாகும். இதனால் வேர்ஜீனிய மக்கள், தாய்நாடான பிரித்தானியாவிலிருந்து விலகித் தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ள

தலைப்பட்டனர்.

### பிரித்தானியர்களின் அமெரிக்கக் குடியேற்றங்கள்

வேர்ஜீனியாவைப்போல் - புதிய இங்கிலாந்து (New England) பல குடியேற்றங்களைக் கொண்டமைந்த பகுதியாகும். ஆனால் - வேர்ஜீனியாவின் செல்வச் செழிப்பினைப் புதிய இங்கிலாந்தால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இங்கு குடியேறியவர்கள் - பிரித்தானியாவில் நடைபெற்ற அரசிற்கும் கத்தோலிக்க மதவாதிகளுக்கும் இடையிலான முரண்பாட்டால் தோன்றிய அமைதியின்மை காரணமாகவே பிரித்தானியாவை விட்டு வெளியேறியவர்களாவர்.

### ஃபிளை மௌத்

அமெரிக்காவின் இன்னொரு குடியேற்றம் 'ஃபிளை மௌத்' என்பதாகும். இங்கு குடியேறியவர்கள் மீன்பிடித்தொழிலையும் கம்பளித் தொழிலையும் மேற்கொண்டார்கள். இதனால் இப்பகுதி மக்களும் செல்வச்செழிப்பை ஓரளவு அனுபவித்தனர். ஆனால், காலப்போக்கில் இக்குடியேற்றமானது மசாசூட்ஸ் குடியேற்றத்துடன் இணைக்கப்பட்டது.

### மசாசூட்ஸ்

மசாசூட்ஸ் குடியேற்றத்தினைப்




பொறுத்தவரையில் - அவர்கள் அதன் ஆரம்பத்திலேயே 'மசாசூட்ஸ்' கம்பனி என்ற அமைப்பினை உருவாக்கி, இதில் 1000 பேர்களை பங்குதாரர்களாக்கியது மட்டுமல்லாது, இங்கிலாந்தில் ஏழைகளாக இருந்த மக்களை வருவித்து அவர்

அமெரிக்கர்களின் ஆரம்பம் குற்றவாளிகளிடமிருந்தும் தொடங்கியது.



களைக் கொண்டு பாரிய பணிகளையும் உருவாக்கினார்கள். இந்த வகையில் - மசாசூட்ஸ் குடியேற்றமானது, ஏனைய குடியேற்றங்களில் இருந்து வேறுபட்ட வகையில் - நன்கு திட்டமிடப்பட்டு, பாரிய மூலதனமிடப்பட்டு - உருவாக்கப்பட்ட குடியேற்றமாக அமைந்தது.

### கனெடிக் டிக்கற்

கனெடிக் டிக்கற் குடியேற்றமானது - மசாசூட்ஸ் குடியேற்றத்தினை அடுத்து உருவாகியதாகும். இக்குடியேற்றமானது, வன்செயல்களில் நாட்டமுடைய அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதானால்- பிரித்தானியச் சிறைகளில் குற்றவாளிகளாகக் கைது செய்யப்பட்டு இருந்தவர்கள்- விடுதலையாகியதும் அமெரிக்காவின் கனேடிக் டிக்கற் ஆற்றுப்பள்ளத்தாக்கை அண்டிய காட்டுப்பிரதேசத்தில் குடியேறியதால் உண்டானதாகும். இவர்கள் குடியேறிய பகுதி ஆற்றுப் பள்ளத்தாக்கு என்பதனாலும், முதன் முறையாக விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்ட 'கன்னி நிலம்' என்பதனாலும்- இந்நிலப் பகுதியின் செழிப்புக் காரணமாக அப்பகுதியில் குடியேற்றக்காரர்கள் தொடர்ந்தும் தம்மை நிலைநிறுத்திக் கொண்டனர்.

### ரோற் ஐலண்ட்

இக் குடியேற்றமானது 1636இல் ஆரம்பமானது. இங்கு சிறப்பாக எதனையும் கூறமுடியாதபோதும்- இவர்களது பொருளாதாரம் முழுக்க முழுக்க மீன் பிடித்தொழிலிலேயே தங்கியிருந்ததைச் சொல்லலாம். ஆனால்- இக்குடியேற்ற மக்கள் - பிரித்தானியாவுடன் அதிகளவு முரண்பட்டுக் கொள்ளவில்லை. 1667 இல் தங்களுக்கான ஒரு ஆட்சிச் சாசனத்தினை முறைப்படி பிரித்தானியாவிடம் விண்ணப்பித்துப் பெற்றுக் கொண்டனர்.

### நியூ ஹெவன்

ஈற்றன் (Eatten) என்ற பெரும் வணிகரும், டொன்போற் (Donpot) என்ற மதத் துறவியும் இணைந்து 1638இல் உருவாக்கியதே நியூ ஹெவன்(New Heaven) என்ற குடியேற்றமாகும். இது-1688இல் கனேடிக் டிக்கற் குடியேற்றத்துடன் இணைக்கப்பட்டது. இங்கு விவசாயம் பிரதான தொழிலாக இருந்தது.

### நியூ ஹெம்ஸ் ஃபெயார்

நியூ ஹெம்ஸ் ஃபெயார் (New Heams Fair) என்ற குடியேற்றமானது 1629 இல் உருவாக்கப்பட்டது. இக் குடியேற்றமானது செல்வந்த நிலையிலிருந்து மசாசூட்ஸ் குடியேற்றத்துக்கு அருகிலிருந்ததால் பெரிதளவு தன்னிறைவான வளர்ச்சியினை பெறத்தவறியது. 1679 இல்தான் முழுமையான குடியேற்றமாக தன்னைப் பரிணமித்துக் கொண்டது.

### மெயன்

1691 இல் மெயன் (Maian) என்ற குடியேற்றமானது 1200 பவுண் செலவில் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டது. இவ்வாறு குடியேறியவர்களுக்கு மசாசூட்ஸ் சட்டசபை உறுப்பினர்கள், குடியேற்றம் உருவாக்கப்படுவதற்கான செலவைப் பிரித்தானியரிடம் கொடுத்து மிகத்தந்திரமாகத் தமது குடியேற்றத்துடன் இணைத்துக் கொண்டனர்.

### மேரி லாண்ட்

கால்வேற் என்ற இங்கிலாந்து பிரபுவால் உருவாக்கப்பட்ட குடியேற்றமே மேரி லாண்ட்(Mary Land). இது 1632 இல் உருவாக்கப்பட்டது. ஒரு தனி மனித முயற்சியால் அவரது செல்வச் செழிப்புக் காரணமாக உருவாக்கப்பட்ட குடியேற்றமாக இருந்தபடியால், அது உடமை சாந்த குடியேற்றமாகப் பிரித்தானியாவால் பட்டயம் வழங்கப்பட்டது.

### கரோலினா

இரண்டாம் சாள்ஸ் ஆட்சிக்காலமானது (1660 - 1685) அமெரிக்க குடியேற்ற வரலாற்றில் சிறப்புடையதாகும். இரண்டாம் சாள்ஸ் மன்னரது நேரடிக் கவனிப்பில் 1663இல் உருவாக்கப்பட்டதே கரோலினாக் குடியேற்றமாகும். இரண்டாம் சாள்ஸ் மன்னன்- அக்குடியேற்றத்தினை தனக்கு வேண்டிய எட்மன்(Edman) பிரபுவின் குடும்பத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார்.

### நியூயோர்க்

நியூயோர்க் குடியேற்றமானது பிரித்தானிய இளவரசியின் கணவனான ஜோர்ஜ் கோமனைப் பெரு[illegible]மைப்படுத்தும் வகையிலும், 166[illegible] 1667 க்கும் இடைப்பட்ட காலத்தில் டச்சுக்காரர்களுக்கும் பிரித்தானியருக்கும் நடந்த யுத்தத்தில் பிரித்தானியர் வெற்றி பெற்றமையை நினைவுபடுத்துவதாகவும் உருவா

வேலும்மயிலும் சேந்தன்.

க்கப்பட்டது. இக்குடியேற்றமானது கடல் வாணிபத்திற்கு வேண்டிய கடற்பயணத்தினை மேற்கொள்ளுவதற்குரிய துறைமுகஙகளைக் கொண்டிருக்கும் மையமாக அமைந்தது. இதனால் - நியூயோர்க் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடத் தேவையான மக்களை இங்கு குடியேற்றி, அது பூரண குடியேற்றமாக பின் காலகதியில் வளர்ச்சி பெற்றது.

### பென்சில்வேனியா

17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் குவேக்கஸ் என்ற மதப்பிரிவு இங்கிலாந்தில் உருவாகியபோது அப்பிரிவைச் சார்ந்தோர் - அங்கு விரோதமானவர்களாக வெறுக்கப்பட்டனர். இதனால் அவர்கள் - அமெரிக்காவில் குடியேறி உருவாக்கிய குடியேற்றமே பென்சில்வேனியா ஆகும். இவர்கள் தனித்துவமாக குடியேறியமைக்குக் காரணம் - தமது மத அனுஷ்டானங்களையும், உரிமைகளையும் தனித்துவமாகப் பேணுவதற்காகவே என்பது குறிப்பிடத்தக்கது.

### ஜோர்ஜியா

வட அமெரிக்காவில் இறுதிக் குடியேற்றமாக - அதாவது 13 ஆவது குடியேற்றமாக ஜோர்ஜியா நிறுவப்பட்டது. இது முழுக்க முழுக்க பிரித்தானியாவினது நாடு கடத்தப்பட்ட குற்றவாளிகளால் - ஜோன் எட்வேட் என்ற பிரபுவினால் உருவாக்கப்பட்டது.

இன்று உலகை ஆள்பவர்களாக தம்மை எண்ணிடும் அமெரிக்கர்களின பூர்வீகம் இப்படித்தான் ஆரம்பமானது.

### தேசிய அரசு பற்றிய சிந்தனை

இவ்வாறு உருவாகிய 13 குடியேறறங்கள- கடற்கரையை அண்டிய பகுதிகளில் அமைந்ததாலும், நிலப்பகுதிகள் பெரும்பாலும் 'கன்னி நிலங்களாக' இருந்தமையாலும் - தம்மை நிரந்தரமாக நிலைநிறுத்த ஏதுவாக இருந்தது.

அது மட்டுமல்லாது - தமது குடியேற்றங்களை நிர்வகிக்க, தம் மளவில் சட்டசபைகளையும் குடியேற்றக்காரர்கள் உருவாக்கினார்கள். இதில் சுவாரசியமான விடயம் என்னவெனில், தனித்தனியே வந்து குடியேறிய இவாகளில் சிலர், தமது ஆற்றலினாலும் திறமையான பொருள ஈட்டலினாலும செலவத்தினைச் சேர்த்துக் கொண்டனர். இந்-செல்வந்தர்களே பின்னர் உயர் குழாத்தினராக (Elites) உருவாகினர்.

இந்த உயர் குழாத்தினரே எதையும் தீர்மானிக்கும் சக்தியாகவே பின்னர் வளர்ந்தனர்.

(பிரதி செவ்வாய் தொடரும்)

# இந்தியா போர் தொடுத்தால் அணு ஆயுதம் மூலமே பதிலடி!

## பாகிஸ்தான் ஜனாதிபதி எச்சரிக்கை




(இஸ்லாமாபாத்)

இந்தியா தன் மீது தாக்குதல் நடத்துமானால் பாகிஸ்தான் அணு வாயுதத்தை பாவிப்பது தவிர்க்கமுடியாது என பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் தனது எல்லையைக் காக்க மரபுவழிப் போர்முறைக்கு அப்பாலான போர் முறையையே நாடும் எனத் தாம், இவ்விடயத்தில் அக்கறை காட்டும் மேற்குலகநாடுகளிடம் எடுத்துக் கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கராச்சியில் இராணுவ நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே முஷாரப் இத்தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

# புதிய விண்கலத்தை சீனா வெற்றிகரமாக செலுத்தியது




(பெய்ஜிங்)

சீனா தனது நான்காவது 'ஷென் சோ.∴' விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணுக்கு அனுப்பியுள்ளது.

இவ்விண் கலம் தற்போது பூமி யைச் சுற்றிய விண் பாதையில் நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரலில் 'ஷென்சோ.∴ -3' வெற்றிகரமான விண்பயணத்தை மேற்கொண்டபின், பாதுகாப்பாக பூமியில் தரையிறங்கியது குறிப்பிடத்தக்கது. இதன் வழியே - 2005 ம் ஆண்டளவில் மனிதனை விண்வெளிக்கு அனுப்ப சீனா திட்டமிட்டுள்ளது. 'ஷென்சோ.∴' என்பது சீன மொழியில் புனிதகலம் என அர்த்தமாகும்.

# 3 அமெரிக்க வைத்தியர்கள் யேமனில் சுட்டுக் கொலை



சி.ஐ.ஏ. தாக்குதலில் பலியான அல்கெய்டாவினர் பயணம் செய்த கார்

(சனா)

யேமனில் மூன்று அமெரிக்க வைத்தியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். தென்பகுதி நகரான ஜிப்லாவில் கிறிஸ்தவ மிஷனரியினால் நடத்தப்படும் வைத்தியசாலை ஒன்றிலேயே இக்கொலைகள் நடைபெற்றுள்ளன.

இது தொடர்பாக விசாரணை நடாத்த யேமனில் உள்ள அமெரிக்கத் தூதரகம், அதிகாரிகளை சம்பவ இடத்துக்கு அனுப்பியுள்ளது. ஒஸாமா பின்லேடனின் குழுவினரே தாக்குதலுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது கடந்த மாதம் சி.ஐ.ஏ. யின் ஆளில்லா உளவு விமானம் ஒன்று, யேமனில் ஆறு அல்கெய்டா உறுப்பினர்களை குண்டுவீசித் தாக்கி கொன்றமை குறிப்பிடத்தக்கது.

## உலகவலம்

# பாகிஸ்தான் எம்.பி. முகமட் துப்பாக்கி நபர்களால் கொலை




பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள பஞ்சாப் மாநிலத்தின் சட்டசபையின் முன்னாள் அமைச்சரும் உறுப்பினருமான முகமட் பாருக் இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவரும் இவரது ஆதரவாளர்களும் இரண்டு வாகனங்களில் வந்துகொண்டிருந்த போது, வீதித் தடை ஒன்றில் வழிமறித்த துப்பாக்கிதாரிகள் சரமாரியாகச் சுட்டதில் இவர் ஸ்தலத்திலேயே பலியானார். பல துப்பாக்கி நபர்கள் இத் தாக்குதலில் பங்குபற்றியுள்ளதால் இது நன்கு திட்டமிட்ட தாக்குதல் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். மெய்க்காவலர்கள் திருப்பித் தாக்கக் கூட அவகாசம் இன்றி இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நேர அட்டவணை

யாழ். மாவட்டத்தில் வதிவோருக்கான கடன் மீளளிப்பு முகமாலை தடைமுகாமில் காலை 08.00 - பி.ப. 4.00 மணிவரை கீழ்க் குறிப்பிடப்படும் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக நடைபெறும்.

**09.01.2003 (வியாழன்)**
நல்லூர்
யாழ்ப்பாணம்
கோப்பாய்
உடுவில்


**10.01.2003 (வெள்ளி)**
மானிப்பாய்
தெல்லிப்பளை
சங்கானை
காரைநகர்
வேலணை
வடமராட்சி கிழக்கு
பச்சிலைப்பள்ளி

**11.01.2003 (சனி)**
கரவெட்டி
பருத்தித்துறை
சாவகச்சேரி


# செய்திப் படங்கள்



காஸாவில் நடைபெற்ற இஸ்ரேல் எதிர்ப்புப் பேரணியில் இஸ்ரேலின் தேசியக் கொடியை எரிக்கும் பலஸ்தீன இளைஞன்.



மத்தியதரைக் கடலில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்காவின் அணுசக்தி மூலம் இயங்கும் விமானம் தாங்கிக் கப்பலான 'யூ.எஸ்.எஸ்.ஜோர்ஜ் வொஷிங்ரன்'



வாக்காளர்பட்டியலில் தமது பெயர்கள் இடம்பெறாததை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் நடத்தும் கென்ய வாக்காளர்கள்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன்சான்றிதழ் தவறவிட்டோர் கருத்திற்கு

தமிழீழ மீட்புநிதிக்கடன் சான்றிதழைத் தவறவிட்டோர், 2002ஆம் ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப் புப்பட்டியலில் தமது பெயர் தெரிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்களது அடையாள ஆவணத்துடன் கீழ்க்காணும் நேர அட்டவணைக்கிணங்க வருகை தந்து, 2002 ஆம் ஆண்டிற்கான மீட்புநிதி மீளளிப்புப் பட்டியலைப் பார்வையிட்டு, தமது தெரிவை உறுதிப்படுத் திக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 02.01.2003 (வியாழன்) | | | |
| அரசியல்துறைச் செயலகம் | - மானிப்பாய் | காலை | - 08.00 - 09.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - சண்டிலிப்பாய் | மு.ப. | - 10.00 - 11.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - சுன்னாகம் | ந.ப. | - 12.00 - 01.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - நீர்வேலி | பி.ப. | - 02.00 - 03.30 மணி |
| 03.01.2003 (வெள்ளி) | | | |
| அரசியல்துறைச் செயலகம் | - வல்வெட்டித்துறை | காலை | - 08.00 - 09.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - தம்பசிட்டி | மு.ப. | - 10.00 - 11.30 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - கரவெட்டி | ந.ப. | - 12.30 - 02.30 மணி |
| 04.01.2003 (சனி) | | | |
| அரசியல்துறைச் செயலகம் | - கைதடி | காலை | - 08.00 - 09.00 மணி |
| அரசியல்துறைச் செயலகம் | - சங்கத்தானை | மு.ப. | - 10.00 - 11.30 மணி |
| மங்கையற்கரசி ம.வி. | - நல்லூர் | பி.ப. | - 02.30 - 04.00 மணி |
| 05.01.2003 (ஞாயிறு) | | | |
| அரசியல்துறைச் செயலகம் | - வேலணை | காலை | - 08.00 - 09.00 மணி |
| வீரசிங்கம் மண்டபம் | - யாழ்ப்பாணம் | மு.ப. | - 11.00 - 02.00 மணி |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜனாதிபதி - ஜே.வி.பி. சந்தித்தாலும் இறுதியான முடிவை எடுப்பது நானே!

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ அறிவிப்பு

பொதுஜன ஐக்கிய முன்னணியைக் கலைத்து பொதுவான எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற ஜே.வி.பியின் யோசனையை, பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் கண்டித்துள்ளன.

தொடர்ச்சியாக ஜே.வி.பி. உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து எதிர்க்கட்சிகளின் அரசியல் நடவடிக்கைகள் குறித்துப் பேசி வருவதற்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொ.ஐ.முவில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தனது எதிர்கால நடவடிக்கைகளை ஜே.வி.பியுடன் இணைந்து மேற்கொள்ள எடுக்கப்படும் முயற்சிகளுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக்கட்சிகள் மத்தியில் இருந்து பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்படும் இந்தச் சூழ்நிலையில், இனவாதத்தைத் தூண்டும் பிற்போக்குச் சக்தியான ஜே.வி.பியுடன் உறவு வைத்திருப்பதை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாசக் கட்சி என்பன பகிரங்கமாகவே எதிர்த்து வருகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, தேசவிடுதலை மக்கள் கட்சி ஆகியவற்றின் கூட்டே பொதுஜன ஐக்கிய முன்னணியாகும. தங்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் சுதந்திரக்கட்சி ஜே.வி.பியுடன் உறவு வைத்துக் கொண்டால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்புரிமையிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை வெளியேற்றுவதைத் தவிர தங்களுக்கு வேறு மார்க்கமில்லை என்றும் இடதுசாரி வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதானப் பேச்சு வார்த்தையை விமர்சித்து வரும் ஜே.வி.பி. - புலிகள் என்ன செய்கின்றார்கள், அரசு என்ன செய்கின்றது என்பதை அறிந்து ஜனாதிபதிக்குத் தகவல் கொடுத்து வருகின்றது. இது எமது கட்சிக்கொள்கைக்கு முரண்பாடானதாகும் என்றும் அக்கட்சிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை - சிறிய கட்சியான ஜே.வி.பி. பெரிய கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணியைக் கட்டுப்படுத்த முடியாது என்று எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ வெளிநாட்டுச்செய்திச் சேவை ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பொ.ஐ.முவில் கூடுதல் ஆசனங்களுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கம் வகிக்கின்றது. அதன் தலைவராக ஜனாதிபதி சந்திரிகா பதவி வகித்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து நானே முடிவு எடுக்க வேண்டும் என்று தெரிவித்த அவர், இந்த விடயத்தில் ஜே.வி.பி. ஜனாதிபதியுடன் ரகசியங்கள் பேசி முடிவெடுத்துவிட முடியாது என்றும் சொன்னார்.

சமீப காலமாக - ஜே.வி.பி. தமது கட்சியை அதாவது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை இரண்டாகப் பிளவுபட வைக்கும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டு வருகின்றது. இதனை நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். என்றும் அவர் கூறினார். (200)

# புலிகள் தொலைத்தொடர்பு கருவிகளை வவுனியாவில் எடுத்துச்செல்லக்கூடாது

## நேற்றைய சந்திப்பில் படையினர் அறிவிப்பு

வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் தொலைத்தொடர்புச் சாதனங்களை எடுத்துச்செல்லக் கூடாது என்றும் புலிகளின் பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிந்து செல்லக் கூடாது என்றும் புதிய கோரிக்கை ஒன்றை வவுனியா இராணுவ அதிகாரிகள் விடுத்துள்ளனர்.

நேற்று நண்பகல் வவுனியாவில் உள்ள வைரவப் புளியங்குளத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் மற்றும் இராணுவ உயரதிகாரிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றின்போது மேற்படி புதிய கோரிக்கையை இராணுவ அதிகாரிகள் முன்வைத்தனர். (03)

### வைகோவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதற்காக 'பொடா' சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்ட ஒன்பது பேரின் மீதான குற்றப் பத்திரிகையை தமிழகப் பொலிஸார் நேற்று சென்னை பூவிருந்தவல்லி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

### Z புள்ளித் திட்டம் ஆராயத் தெரிவுக்குழு

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான 'Z' புள்ளித் திட்டம் குறித்து ஆராய்வதற்காக 15 பேர் அடங்கிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. (200)

### கடலோரக்காற்று இன்று வெளியீடு

கடற்புலிகளின் 10 ஆம் ஆண்டு நிறைவு வெளியீடாக நிதர்சன நிறுவத்தினரால் தயாரிக்கப்பட்ட, ந.கேசவராஜனின் 'கடலோரக் காற்று' என்ற முழு நீளத் திரைப் படத்தின் வெளியீட்டு விழா இன்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

## மீளக்குடியமர....

களை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கும்படி கோரி, நேற்றைய தினம் காலை ஏழு மணியளவிலிருந்து நூற்றுக் கணக்கான மக்கள் சங்கானை பிரதேச செயலகத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், நேற்றைய தினம் சங்கானை பிரதேச செயலகம் முற்றாகச் செயலிழந்தது.

மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் பல வாசகங்களடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களால், சங்கானை பிரதேச செயலகத்தின் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. தமது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை அல்லது தமது போராட்டம் தொடர்பாக சாதகமான பதில் கிடைக்கும் வரை தமது மறியல் போராட்டம் தொடரும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் தெரிவித்ததுடன், தாம் தமது கோரிக்கைகளடங்கிய மகஜர் ஒன்றினை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் கையளிக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். (லி,க)

## அமைச்சர்...

திப்பில் கணிசமான விபரங்களை அவர் சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை- அமைச்சர் மிலிந்த, உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான தனது யாழ். விஜயம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பார்.

இக்குழுவினர், இவ்விவகாரம் குறித்து புலிகள் தரப்பினரையும் சந்தித்துப் பேசவுள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## மக்கள்....

தவிர்க்கமுடியாது. இன்னும் பல படிகளை நாம் தாண்டவேண்டியிருக்கின்றது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (200)

## ராணுவ....

மையாக உள்ளன என்றும், விவசாய நிலங்கள் பயன்படுத்தாமல் உள்ளன என்றும் அரசு பொய்ப் பிரசாரம் மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறான அரசின் செயலையும் வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது என்று, ஒன்றியத் தலைவர் சிவமகாராஜா தெரிவித்தார்.

மேற்படி விடயங்கள் தொடர்பாகக் கண்டன மகஜர் ஒன்றைப் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு வழங்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவ் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## சிறுமியின்...

ஹரந்திர டி சில்வாவிடம் நிபுணத்துவ ஆலோசனை பெற்றார். இதன் பிரகாரம் - சிறுமியின் ஆடையையும், சந்தேக நபரான தி.ரமணன் (வயது 21) என்பவரின் இரத்த மாதிரியையும் கொழும்பிற்கு அனுப்பி மரபணுப்பரிசோதனை நடாத்த உத்தரவிடும்படி கேட்டுக்கொண்டதன் நிமித்தமே, யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா மேற்படி உத்தரவை விடுத்துள்ளார்.

மரபணுப் பரிசோதனை அறிக்கையை எதிர்வரும் 8 ஆம்திகதி நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கும்படி, கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு, யாழ்.நீதிவான் விக்னராஜா உத்தரவிட்டுள்ளதுடன், மரணம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கும் சந்தேக நபரான தி.ரமணனை, இன்று காலை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் நிறுத்தும்படி யாழ்.சிறைச்சாலை பிரதி அத்தியட்சகருக்கு யாழ்.நீதிவான் நேற்றைய தினம் உத்தரவிட்டார்.

இச்சிறுமியின் மரணம் தொடர்பாக உண்மையை விரைவில் கண்டுபிடிக்க, யாழ். நீதிமன்றம் முயற்சி செய்ய - இச்சிறுமியின் உள்ளாடையையும், சந்தேக நபரின் இரத்த மாதிரியையும் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்த, ஒன்பதாயிரம் ரூபா நிதி தேவைப்பட்டதனால், அந்நிதியினை நீதியமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சிறுவர் இல்லமான யாழ்.குடாநாட்டில் இயங்கும் கானான் சிறுவர் இல்லப் பொறுப்பதிகாரி போதகர் ஏபிரகாம் வழங்கி உதவினார். (லி)


# பொருளியற் கல்லூரி

பெருமாள் கோவில் அருகில்
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

இணுவில் மத்திய கல்லூரி அருகில்
கே.கே.எஸ். வீதி, இணுவில்

**A/L 2005**
கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம் - 04-01-2003 சனிக்கிழமை

| பாடம் | யாழ்ப்பாணம் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| நாடக அரங். | சுகந்தன் | சுதன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| இந்துசமயம | தரன் | தரன் |
| அரசியல் | கியூபேட் | கியூபேட் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

யாழ்நகரில் ~ கலைப்பிரிவு ~ 9 மணி
வர்த்தகப் பிரிவு ~ 10 மணி
இணுவில் ~ கலைப்பிரிவு ~ 8 மணி
வர்த்தகப் பிரிவு ~ 3 மணி

(சி-382)



# TNT யின் விசேட விலைச் சலுகை!

**Loving Friends,**

புதுவருடம், தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்.மண்ணில் முதன் முதலாக TNT நிறுவனம் தனது பொதி விநியோக சேவையில் பருவகாலப் பொதியினை (Seasonal Box) பாரிய விலைக் குறைப்புடன் அறிமுகம் செய்துள்ளது என்பதை மனமகிழ்ச்சியுடன் தெரியப்படுத் துகிறோம். இதன் மூலம் விசேடமாக தயாரிக்கப்பட்ட 1Kg, 3Kg பருவகாலப் பெட்டிகளில் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர், நண்பர் களுக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 நாட்களிலும், உள்நாட்டில் கொழும்பு, நீர்கொழும்பு, கண்டி, நுவரெலியா, குருநாகல், அவி சாவளை போன்ற இடங்களுக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் 24 மணி நேரத்திலும் புதுவருட, தைப்பொங்கல் பரிசுகள், Cardகள், அன்புப் பரிசுகளை உடனுக்குடன் அனுப்பிட ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் உடனடியாக விரையுங்கள்.

தொலைபேசி - 222 3771.

TNTகூரியர் சேவை,
139, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நாங்கள் உங்கள் அன்பளிப்புப் பொதிகளை மட்டுமல்ல, அவற்றோடு உங்கள் அன்பினையும் எடுத்துச் சென்று சேர்க்கின்றோம். இவ்விசேட சலுகை 2003 ஜனவரி 15 வரை மட்டுமே.



# வாசகர்களே, வாடிக்கையாளர்களே

நமது ஈழநாட்டில் விளம்பரம் செய்வதற்கு உங்களுக்கு அருகிலேயே இனி எமது விளம்பர முகவர்கள்...!

# நமது ஈழநாடு விளம்பர முகவர்




இ.சுதாகரன்
சிவகஜன் தொலைத் தொடர்பு நிலையம், சந்தை வீதி, கொடிகாமம்.



070-213158



# BARATHY

கல்வி நிறுவனம்

**A/L 2005**
கலை, வர்த்தகம்

வர்த்தகப் பிரிவு - 4.1.2003
சனி - 2 மணி
கலைப்பிரிவு - 6.1.2003
திங்கள் 3.15

(சி-383)